1293

# ஜகன்மோகினி
# JAGANMOHINI

1—7—58

[illegible]

1293
4-58

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1958
MADRAS



JL
N58.35-7.
(88224)

★



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென் னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஜுலை 1958. மலர் 35, இதழ் 7. விளம்பி ௵ ஆனி மீ

## விஷய அட்டவணை

சுதந்திர ஆட்சியா? பக்கம்
சுயதந்திர ஆட்சியா?
—வி. கே. பார்த்தசாரதி 1
சொல்லட்டுமா!
—ஹாஸ்யநடிகர் நாராயணராவ் 5
ஏமாற்றம்
—தஞ்சை பி. வி. ராமன் 9
பாரதப் பூங்கா
—வசுமதி ராமசுவாமி 14
குழந்தை மனம்
—கே. வி. விஜயலக்ஷ்மி 16
காளிதாஸர் கனவு
கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி 23
கிழக்கு வெளுத்தது
—வை. மு. கோ. [113-128]

மேல் அட்டைப்படம்.

### இந்திய வாழ்க்கை முறையும், இயற்கை காட்சிகளும்

வாழ்க்கையின் சத்தான அம்சங்களை எளிதில் உணர்ந்து அவைகளை வலியுறுத்துவதில் காந்திஜிக்குள்ள பிரத்தியோகத் திரமை காரணமாய் அவர் பொது மக்களிடம் பேசும்போதும், எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடிய பிரத்தியட்ச ரூப உதாரணங்கள் மூலம் விஷயங்களை விளக்கி வந்தார். காந்திஜியால் கண்டுபிடிக்கப்பட்ட அத்தகைய பிரத்தியட்ச சின்னங்களில் மிகவும் சக்தி வாய்ந்ததும் அர்த்தபுஷ்டியுள்ளதும் எது வென்றால்; அது சர்வவியாபகமான சர்க்கா அல்லது கைராட்டைதான், கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு இன்றுகூட கைராட்டை யென்பது வெறும் சின்னம் மட்டுமல்ல. போட்டியும் சிக்கலும் பெருகி வருகிற தற்கால சமுதாயத்தில் கைராட்டை மக்களின் பொருளாதார சுதந்திரத்துக்குக் கருவியாகவும் உத்தரவாதமாகவும் விளங்குகிறது.

இப்படத்தில் ஆழ்வாருக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துச் சிறுவர்கள் கைராட்டை சுற்றுவதற்கு இளமையிலேயே பழக ஆரம்பித்துவிட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்தியக் கிராமப்புற மக்களில் 50 லட்சம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு கைராட்டையானது பிரதான அல்லது உப ஜீவன மார்க்கமாக விளங்குகிறது.

### மத்திய ஆசியத் தொல்பொருள்கள் காட்சிசாலை—புது டில்லி

மத்திய ஆசியத் தொல் பொருள்கள் காட்சிசாலை 1929-ல் ஸ்தாபிக்கப்பட்டது. பிரசித்திபெற்ற புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் சர் ஆரெல் ஸ்டீன் சேகரித்த சிறந்த பொருள்களைக்கொண்டு அது ஆரம்பிக்கப்பட்டது.

ஆதிகாலத்திலிருந்தே சீன துருக்கிஸ்தான் வழியாக ஈரான், இந்தியா, இதர வெளிநாடுகள் ஆகியவைகளை இணைக்கிற இரண்டு வர்த்தகப் போக்குவரத்து மார்க்கங்கள் இருந்தன. அவை சீனாவையும், ஈரானையும் சேர்த்தது.

இந்தப் பிரதேசத்தில் இந்திய, சீன, ஈரானிய, கிரேக்க நாகரீகங்கள் நான்கும் சந்தித்தன. அந்த சந்திப்பால் கலைத்துறையில் புதிய பாணி உருவாயிற்று; மண் பாண்டங்கள், ஜவுளி ரகங்கள், சவர்ச் சித்திரங்கள், பட்டுத் துணியில் வரைந்த ஓவியங்கள் ஆகியவைகளில் ஒரு புதிய முறை உருவாயிற்று.

# சுதந்திர ஆட்சியா?
# சுயதந்திர ஆட்சியா?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்.

17524

## மகாத்மாஜீயின் ஆயுதங்களின் இன்றைய உபயோகம் எப்படி ?

மகாத்மாகாந்தி, சாத்வீகப் போராட்டமென்ற இயக்கத்தை நிறுவி, அதில் வெற்றிபெற, உண்ணுவிரதம், மறியல், வேலை நிறுத்தம் என்ற மகா புனிதமான அஹிம்ஸா ஆயுதங்களை ஆக்கித்தந்து சென்ருர். இவைகளைக் கொண்டே அவரும் இந்தியச் சுதந்திரப்போரை நடத்தி, கத்தியின்றி, ரத்தமின்றி, எதிரியின் அபிமானத்தையும் பெற்று, தனது காரியத்தைச் சாதித்துக்கொண்டு, இந்தியச் சுதந்திரம் பெற்றுத்தந்து, தன் உயிரையும் அப்புனித கைங்கர்யத்திற்கு அர்ப்பணித்து மறைந்தார்.

ஆனல், அவர் ஆக்கித்தந்த இந்த வேலைநிறுத்தம், மறியல், உண்ணுவிரதம் என்ற தெய்வீகப் புனிதமான உத்தம சாத்வீகப் போராட்டக் கருவிகளை, நாம் எப்படிக் கையாளுகிருேம்? சமூகத்தைச் சின்னுபின்னப் படுத்திச் சுயநலம் சாதித்துக்கொள்ளவே ஹிம்ஸா மார்க்கத்தில் இந்த அஹிம்ஸாக்கருவிகள் கையாளப் பட்டு வருகின்றனவே!

## மூலகாரணம் என்ன ?

சமீபத்தில் இந்தியாவெங்கும் முக்கியத் துறைமுகங்களில் 16-6-58 முதல் நடந்தேறிவரும் வேலைநிறுத்தத்தையும் அதன் விளைவுகளையும் கவனியுங்கள். நமது சென்னையில், வேலைநிறுத்தமும் மறியலும் காரணமாகப் போலீசார் குண்டுவீச்சுப் பிரயோகம் செய்தனர். சுமார் 7 பெயர்கள் மாண்டதாகவும், பலர் படுகாயப்பட்டதாகவும், அதிகாரபூர்வமான செய்தி. குண்டு வீச்சின் சேதத்தையொட்டித் தொழிலாளர்கள் ஒன்றுகூடி, அனுதாபங் காட்டி, 18-6-58 தினத்தன்று எல்லாத் தொழில் ஸ்தாபனங் களும் வேலைநிறுத்தமும் கதவடைப்பும் செய்தாகவேண்டுமெனத் தீர்மானித்து அப்படியே செய்தும் முடித்தன. பாங்கிகள் பலவுங்கூடப் பங்கெடுத்துக் கதவடைப்புச் செய்ய நேர்ந்தது. மூலை முடுக்குகளில் நடந்தேறிய கலகங்களும், வெறியாட்டங்களும், சூறைகளும் கணக்கற்றவை. எந்தப் பொதுநலனுக்காக இந்தக் கலவரம் யாவும்?

துறைமுக அதிகாரிகளோ, வேலைநிறுத்தம் சட்டவிரோதமானதெக்கூறி, தொழிற்பயிற்சியற்ருேர் பலரைத் தொழிலிற்கு அமர்த்திக் காரியத்தை நடத்திவருகின்றனர். தொழிலாளர் திரும்பாவிட்டாலும், புதிதாக வந்தவர்கள் தொகையும், திறனும் துறைமுகக் காரியங்களைத் தடங்கலின்றிச் செய்துபோகத் தக்கதுவே யெனவும் அறிக்கைவிடுத்துக் காரியம் நடத்திவருகின் றனர். போலீஸ் குண்டுவீச்சைப்பற்றிப் பகிரங்க விசாரணை

நடந்தேறுகின்றன. இந்த விசாரணையால் இறந்தவர்கள் பிழைப்பார்களா? சமூகத்திற்கு எவ்வித க்ஷேமலாப சௌகர்யங்களாவது உண்டாகப்போகிறதா? அநீதம் நடந்துவிட்டதே யென்ற சமூக அறிவு ஏற்பட்டு, அதை அகற்றவேண்டிய அனுதாப உணர்ச்சி அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும், அவதிப்படுவோருக்கும் உண்டாகாமலும், உண்டாக்காமலும் விடுத்து, தப்பு எவர்மீது என்று குற்றஞ்சாட்ட விசாரணை நடத்தி, மேலும் காரமும் கசப்பும் வளர்ப்பதால் அரசாங்கம் செங்கோலாகிவிடுமா? சமூகவாழ்வு சுகம்பெற்றதாகிவிடுமா? தப்பு எவர்மீதென முடிவுவந்தபோதிலும், முடிவு காரணமாய் பரஸ்பரகாரமும் கசப்பும் மேம்பட்டு, சமூகப்பிளவும், அமைதியின்மையும்தான் அதிகரிக்கச் செய்யும். பலநாட்களாகியும் வேலைநிறுத்தம் தீர்ந்தபாடில்லை. சுடப்பட்டு இறந்தவர் சவங்களை நகரைச்சுற்றி பிரபல ஊர்வலமாகத்தான் எடுத்துப்போயினர் தொழிலாளர் சங்கத்தினர்—பிரயோஜனமென்ன? மூலகாரணத்தை அகற்றவல்லவா அதிகாரிகளும் தலைவர்களும் ஒத்துழைத்துப் பாடுபடவேண்டும். அதை விட்டு, கட்சிகட்டிப் போட்டிபோட முன்வந்தால், சமூகம் நிர்மூலம்தான். பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில்ஸ்களில் 9-6-58 முதல் நடந்துவரும் வேலைநிறுத்தத்தையும் கதவடைப்பையும் கவனியுங்கள். சுமார் 14,000 தொழிலாளர்கள் வேலையின்றிப் பல நாட்கணக்காக நின்றுள்ளார்களாம். பொதுமக்களுக்குத் தினப்படிக்கு அவசியமாகத் தேவையான பல ஆயிரக்கணக்கு மதிப்பான துணிவகையருக்கள் உற்பத்தியாகாது நின்றுள்ளனவாம். இதன் பிற்கால பாதகத்தை எவரும் இன்று கவனிப்பதாயில்லை. 1957-ன் வேலைநிறுத்த கதவடைப்பு காரணமாய் நடந்தேறிய மத்யஸ்த கோர்ட் தீர்ப்பைக்கொண்டு, போனஸ்கேட்டு, அது மறுக்கப்பட்டதால், தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர் 9-6-58-ல். அது செல்லத்தக்கதல்ல என்று மறுத்து, கதவடைப்பு செய்தார்கள் மில் அதிகாரிகள். இந்தத் தொல்லை பத்து தினங்களுக்கு மேலாக நீடித்ததால், கவர்மெண்டார் நிலைமையை விவரித்து, இருதரத்தாரும் ஒப்பி நியமிக்கும் ஓர் மத்யஸ்தசபைமூலம் இந்தத் தகராறு தீர்க்கப்படுவது நலமென் அறிக்கைவிடுத்தனர். ஆனால், மில் அதிகாரிகளோ, இதர மில்களை விடச் சலுகைகள் அதிகமாகக் காட்டும் தாங்கள் இவ்விஷயத்தில் மீண்டும் சலுகை காட்ட முடியாததை மத்யஸ்தத்திற்கு எதற்காக விடவேண்டுமென மறுத்து, கவர்மெண்டார் வேண்டுகொளுக்கும் இணங்கமுடியாதெனப் பிரதி அறிக்கை விட்டுள்ளனர். கதவடைப்பு நீடிக்கிறது பதினைந்து தினங்களுக்கு மேலாக. முடிவு, எப்படியாகுமோ, கவலைக்கிடமாகத்தானிருக்கிறது.

இம்மாதிரியே வேலைநிறுத்தங்களும், கதவடைப்பும் நெடுகால நீடிப்பில் நாட்டில்நடந்தேறுமானால், நாட்டின் அரசியல்திட்டமும், பொருளாதார சமநிலையும், சமூக சமதர்மமும் க்ஷேமலாபமுமோ எப்படி ஏற்படக் கூடும்? வெறும் விசாரணைகளாலும், அறிக்கைகளாலும், யாது பயன் விளையும்? மனத்தில் விஷம் தீண்டப்பட்டுள்ளதே: உணவு பொருள்கள் விஷந்தீண்டப்பட்டு பல உயிர்கள் பலியானது பற்றியும் பகிரங்கவிசாரணை நடந்துவருகிறது

18322

எலிமருந்து விஷந்தான்—அந்த விஷம் எவ்வளவு வேகமுள்ளது என்பதை இவ்விசாரணை முடிவுசெய்யப்போகிறதாம். விஷமருந்தை உணவுப்பொருள்களுடன் சேரவிட்டு, விஷத்தின் தன்மையையும் வேகத்தையும் விசாரிப்பதால் விஷந்தீண்டி இறந்தவர்கள் பிழைப்பார்களா, இறக்கப் போருபவர்கள் தப்புவார்களா? இந்த விஷப்பரீக்ஷையின் பலன் கண்கூடாகக் கைமேல் கண்டும், அறிவும், தெளிவும் துலங்கவில்லையே எவர்க்கும்.

முந்தரா மோசடிக்கு எந்த அதிகாரி உட்கையென்ற விசாரணை நடக்கிறது, கோடம்பாக்கம் வாலிபன் மரணத்திற்கு போலீசார் ஜவாப்தாரியா இல்லையா என்ற விசாரணையின் எதிரொலி சட்டபூர்வமாக வெகு திட்டமாக நடக்கிறது. எல்லாம் மிஞ்சிய காரியத்திற்குப் பொறுப்பாளியைத் தேடும்பொழுது, போக்குவேடிக்கைபோல காரியங்கள் நடக்கிறதே யொழிய, காரியங்களை மிஞ்சிப்போகாமல் தடுத்திட அரசியலும், தலைவர்களும், கட்சிவாதிகளும் ஒத்துழைப்பதாகத் தெரியவில்லையே.

காந்தியகான் போராடிய காலத்தில் நாம் பெற விரும்பிக் கனவு கண்டுவந்த சுதந்திர ஆட்சியும், வாழ்வும் இருப்பதாக இந்தியாவில் இன்று எங்குங் காணவில்லையே.

பம்பாயில் முனிசிபல் தொழிலாளிகள்—தோட்டிகள்—முதலானோர் 30,000 பேர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். ஒவ்வொருவருக்கும் 5-ரூபாய் சம்பள உயர்வு கேட்டனர். இப்படிக்குப் பயமுறுத்தி சம்பள உயர்வு ஒவ்வொரு ஸ்தாபனத் தொழிலாளர்களும் கேட்டுக்கொண்டே போனால், எங்கிருந்து இவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது?—8 நாளாய் நடந்தேறிய இந்த வேலைநிறுத்தம் 22-6-58-ல் ஓர் முடிவுக்குவந்தது. 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை தரப்படி இந்தமாத முதல்தேதி முதல் சம்பள உயர்வு கொடுத்து இந்தத் தகரார் தீர்க்கப்பட்டுள்ளது. இலை அறுக்கக் • கொடுத்த கத்தியைக் கொண்டு, கொடுத்தவன் தலையை அறுக்க அதனை உபயோகப்படுத்துவது போல, சமூகப் பொதுநலனைத் தேடுவதற்கு உபயோகிக்கும் வண்ணம் காந்திமகான் தேடித்தந்த அரிய சீரிய அஹிம்ஸாப் போராட்ட ஆயுதங்களைக் கொண்டு, சுயநலத் தேட்டத்திற்காக ஹிம்ஸை செய்து சமூகச் சீர்கேடுண்டாக்க சுதந்திர இந்தியாவில் பாடுபடுகிறோமே! இது யாருடைய நலத்திற்கு?—

## குடும்பக் கட்டுப்பாட்டுக்கு வழி எது ?

ஜனத்தொகை அதிகரித்து விட்டதாம் அளவுமிஞ்சி! இதுவே இவ்வளவு அவகேட்டிற்கும் அடிப்படை காரணமாம். இனியும் இவ்வருஷம் ஜனத்தொகை மிகுதியினால் வாழ்வுத் தரமும், உணவுப்பொருள் தேவையும் வெகுவாகப் பாதிக்கப்படுமாம்!—இன்றைய வேலையில்லாத் திண்டாட்டமும், வேலையிலுள்ளோர் பயமுறுத்தல்களும் மேலும் அதிகப்படுமாம்! ஆகவே, இந்த வருஷத்தில், எவரும் பிள்ளை பெறக்கூடாது என்று குடும்பத் திட்ட வட்டத்தார் உத்திரவு பிறப்பித்து, நமது சமூகத்தாருக்கு

புத்திமதி கூறி அதற்கான வழிதுறைகளைப் போதிப்பதற்காக, லக்ஷக்கணக்கில் பணச்செலவு செய்து நமது அரசாங்கமும் ஸ்தாபனங்கள் பல நாடெங்கும் நிறுவியுள்ளது!–எந்த நோய்க்கு, என்ன மருந்து?—பிள்ளை பெறாமலிருப்பதற்குப் புத்திமதி கூறி, வழிதுறைகளும் விளக்கிக்காட்ட அதிகாரிகளும் ஸ்தாபனங்களும் வேண்டுமா? — மனக் கட்டுப்பாடுண்டானால் குடும்பக் கட்டுப்பாடு தானாகவே உண்டாகிறது. அரசியலிலும், பொருளாதாரத்திலும், அடிப்படைக் காரணத்தைக் கவனியாது, செய்வினைகளால் விளையும் விளைவுகளைக்கொண்டு குற்றஞ்சாட்ட விசாரணைகள் நடத்தி முடிவுகள் சொல்லிப் போவதுபோலத்தானிருக்கிறது, இம்மாதிரிக் குடும்பக் கட்டுப்பாடு யோசனைகளும்.

**இயற்கையை எதிர்க்க எவரால் முடியும் ?**

இயற்கையை எதிர்த்து, நமது சுய சாமர்தயங்கொண்டு, செயற்கையால் எதையுஞ் செய்துகொள்ள முன்வரும் விஞ்ஞான ஆராய்ச்சிகால விளைவே இவையாவும். இயற்கையை எதிர்க்க எவராலேனுமாகுமா?—வெய்யில் வேக காரணமாய் பீகாரில் 400 பேர்கள் சுமார் மரணம்; ஐக்யமாகாணத்தில் 140 பேர்கள் மேல்; டெல்லி, பஞ்சாப், வாரணாசி மற்றும் பல இடங்களிலும் அனேகம் உயிர்ப்பலி: இதைத் தடுக்க எவராலும் முடிந்ததா?—செயற்கை மழை உண்டாக்கத் தினம் 5 ரூபாய் செலவில் சென்னைமாகாண அரசாங்கம், கோயம்பத்தூர் விவசாய காலேஜில், 19-6-58 முதல் சோதனைகள் ஆரம்பித்து ஒருவருட காலம் நடத்த உத்திரவு பிறப்பித்துள்ளது. இவையெல்லாமா சமூக நலன்?

அதிகாரிகளுக்கும் சமூகத்தாருக்குமாகப் பரஸ்பர ஒத்துழைப்பு முறையில் அன்பும் ஆதரவும் பெருகி நாடும் நாட்டாரும் க்ஷேமலாபமடையும் வகையில் எவ்வித சோதனைகளோ, நடைமுறையில் கட்டுப்பாடுகளோ, விசாரணைகளோ சட்ட திட்டமோ காணோம்: எல்லாம் பேச்சும், பிரசாரமும், பகட்டும், பிரகடனமும், அறிக்கையும், ஆர்ப்பாட்டமுமாகத்தான் காண்கிறது. காரியத்தில், ஒவ்வொருவரும் பிறரைப் பழித்துப்பேசி கடமைகாட்டித் தாம் மட்டும் சுயேச்சைப்படிச் சுயநலந்தேடிப் போவதுதான் கால ஒழுக்கமாய் அமைந்துவருகிறது. இந்நிலையில் எந்தக் குடியரசுதான் நேர்மைப் பலன் தரக்கூடும்?—எந்தச் சுதந்தர அரசாங்கந்தான் சமதர்ம சமூக ஸ்தாபனம் செய்யக்கூடும்? நாம் வாழ்வது சுதந்திர ஆட்சியிலா?—சுய தந்திர ஆட்சியிலா?

ஸ்ரீ நேருஜீயின் புத்திமதிக்கு இணங்கி துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் செய்துகொண்டதுபற்றி யாவர்க்கும் மகிழ்ச்சியே.

———

# ★ சொல்லட்டுமா ! ★

ஹாஸ்ய நடிகர் எல். நாராயண ராவ்.

★

நடுநிசி வேளை. ஏதோ ஒரு கம்பு வந்து எங்கள் மண்டையைப் பதம் பார்த்தது. அலறியவாறு எழுந்தோம். ஒரு கிழவர் கையில் கம்புடன் காட்சியளித்தார். "ஏய் சோம்பேரிகளா எழுந்திருங்கள். எதை திருடிக்கொண்டு போக வந்தீர்கள்" என்று அதட்டினார்.

"ஐயோ நாங்கள் சோம்பேரியில்லே ... திருடனில்லே. மாமா! நாங்கள்...வந்து.... திருவிழாப் பார்க்கப் போகிறோம்" என்று இருவரும் நடுங்கினோம்.

"அவ்வளவுதானு! சரி தூங்குங்கள்" என்று நகர்ந்தார். தலையில் விழுந்த அடியைத் தாள முடியாது தடவிக் கொண்டோம். அங்கு வாய் தட்டலோடு இருந்தது. இங்கு கையும் வந்து விட்டதே. ஓடிவிட வேண்டும் என்ற பதை பதைப்பில் நேரமே தெரியாது கிளம்பி விட்டோம்.

கொஞ்ச தூரம்தான் சென்றோம். ஒருபெண்மணி எங்களை வழிமறித்தாள். அருகில் வந்து விளக்கைத் தூக்கி எங்கள் முகத்தைப் பார்த்தாள். "ஐயோ! தாஸரய்யா மவனில்லையா நீ. எங்கேப்பா இந்த நேரத்தில் தனியா வரே..." என்று அதட்டினுள்.

'ராமேஸ்வரம் போனலும் சனீச்வரன் விடாது போலிருக்கிறதே. இந்த கோழிவிற்பவளுக்குக் கூடவா அப்பாவைத் தெரியும் நாசமாய்ப் போச்சு' என்று நொந்து கொண்டேன்.

"ஆமாம். நாங்கள் திருவிழாவிற்குப் போகிறோம்" என்றேன்.

"திருவிழாவுக்கு இந்த நேரத்திலா....தம்பி! திரும்பு வந்த வழியே. இங்கே குறவங்க கூட்டம் ஜாஸ்தி. நீ போனியான உன்னை அடிச்சுக் கொண்ணு புடுவாங்கா. நீ காதிலே கடுக்கன் வேறே போட்டிருக்கே. பேசாமெ திரும்பு. இல்லாட்டி நானே உன் காதை அறுத்து கடுக்கனை எடுத்துக்குவேன்" என்று கத்தியை எடுத்தாள். 'இதென்னடாவம்பு! காதை அறுத்துவிடுவாளா? கடுக்கன் போனல் போகிறது. காது போய்விட்டால் என் ஆசை என்ன ஆவது?' உடனே புறப்பட்ட சத்திரத்திற்கே வந்து சேர்ந்தோம்.

எப்போது பொழுது புலரப் போகிறது என்று காத்திருந்து கம்பி நீட்டினோம். வழியில் போகும்போது குற

வர்கள் அந்த வட்டாரத்தில் செய்யும் கலாட்டாக்களைப் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டதை கேட்டதும், கோழி முட்டைக்காரிக்கு ஒரு பெரிய கும்மிடுப் போட்டேன்.

ஊரை ஒருவாராக அடைந்து விட்டோம். பாலாமணி நாடகம்நடக்கும் இடத்தை ஒரு கண்ணோட்டம் விட்டு விட்டு அவள் தங்கியிருக்கும் இடத்தை ஆராயத் தொடங்கினேன். அந்த வீட்டு வாசலில் போய் நின்றேன். வாயிலில் காவல்காரன்கள் வேட்டை நாய் போல் நின்றிருந்தனர். அவர்கள் கண்ணில் பட வேண்டும் என்று குறுக்கும் நெடுக்கும்நடைபோட்டேன். கால்தான் ஓய்ந்தது. ஆனல் மனம் ஓயவில்லை.

என் எண்ணம் என்னவென்றால்,நான் நடப்பதைப் பார்த்துவிட்டு பாலாமணியம்மாள் "பையா! யாரப்பா நீ. எதற்காக இங்கு நிற்கிறாய். பார்ப்பதற்கு சிவப்பாக நன்றாக இருக்கிறாயே. என் நாடகத்தில் ஒரு பாத்திரமாக உன்னை எடுத்துக் கொள்கிறேன். நடிக்கிறாயா?,' என்று கேட்டுவிடுவாள். நாம் உடனே ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். பிறகு என் பெயர் உலகம் முழுவதும் பரவிவிடும். என்பதெல்லாம் என் மனக்கோட்டை. ஆனல் அந்தக் கோட்டையின் ஒரு சிறு மூலைகூட திறப்பதாகக் காணோம்.

அன்றிரவு நாடகம்.

டிக்கெட் வாங்க பணமில்லை. ஆனல் நாடகம் என்னவோ பார்த்தே தீரவேண்டும். கும்பலில் நுழைந்து மறைந்து ஓட சமயம் பார்த்துக்கொண்டே இருந்தேன். நுழைந்தும்விட்டேன். நாடகம் தொடங்கி விளக்குகள் அணைக்கப்பட்டதும்,மெள்ள மெள்ள ஒவ்வொருவராகக் கடந்து, முன்னேறிக் கொண்டேயிருந்தேன். சிறிய பையனாகையால் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. முன்னே மேடையருகில் சென்று விட்டேன்.

நாடகம் பார்க்கும்சந்தோஷத்தில் நாமே நடிக்கவேண்டும் என்ற ஆவேசத்தில் "பாலாமணி! பாலாமணி! என்னையும் உன் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளேன், என்று கூவலாம் போலிருந்தது எப்படியோ என்னை அடக்கிக்கொண்டேன். அப்படி கத்துவது அநாகரீகம் என்று என் மனதில் பட்டது.

நாடகமும் முடிந்தது. இரவெல்லாம் இதே நினைவு தூக்கமும் வரவில்லை. பார்த்தது முதல் என் ஆவல் கட்டுக்கடங்காது போய் விட்டது. அதனல் விடேன், தொடேன் என்று மறுநாளும் சென்றேன் பத்தி உலாத்த. நேற்றும் ஒரு பையன் நடந்து, இன்றும் நடக்கிறன் என்றால் எல்லோருக்கும் சந்தேகம்

தானே. அந்தகாவல்காரன் "ஏபையா! நீஎதற்கு இப்படி உலாத்துகிருய்?" என்ருன்.

"ஸ்வாமி தரிசிக்க வந்தேன். தேர் வருகிறதா என்று பார்க்கிறேன்" என்றேன்.

"தேர் வீட்டிலிருந்தாவரப் போகிறது தெரு விலிருந்தல்லவா தேர் வரும் வீட்டினுள்ளே என்ன பார்க்கிறே?"

"ஒன்னுமில்லேப்பா. பாலாமணியம்மா இருக்காங்களா? தேர் வரும் நேரம் ஆகிவிட்டதல்லவா?"என்று ஏதோ சம்மந்தமில்லாது கேட்டேன்.

தேர் வரும் போது ஸ்வாமியை தரிசிக்க பாலாமணி எப்படியும் வாசலுக்கு வருவாள். அப்போது அவளை அருகில் பார்க்கலாம் எதாவது பேச்சு கொடுக்கலாம் என்ற நப்பாசை. என் கண் உள் புறமே சுற்றி துழாவிக் கொண்டிருந்தது.

தேரும்வந்துவிட்டது.ஒரே கும்பல் நெக்கரித்தது.பாலாமணியும் அன்னநடை நடந்து ஆடி ஆடி வந்தாள். அவளுடன் நாடகத்தில் நடிக்கும் சில பெண்மணிகளும் கூடவந்தார்கள். என் வாய் என்னை அறியாமலேயே பிளந்து விட்டது. தேர் ஞாபகமேயில்லாது அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

தொண்டையைக்கனைத்து கொண்டேன். தேர் திருநாளில் என் கனைப்பு அவர்கள் காதில் எங்கே விழும். அது விழுவதற்கு முன் என் தலையை ஒரு கரம் முரட்டுத் தனமாகப் பற்றி குலுக்கியது. முனகியவாறு திரும்பினேன்.

என்னுடன் கூட வந்திருந்த பையனின் தகப்பனுர் ருத்திரமூர்த்தி போல் கண்கள் சிவக்க, உதடு துடிக்க நின்று கொண்டிருந்தார். அந்த பையன் உடல் நடுங்க என் பின்னல் ஒட்டிக் கொண்டான். என் குலை நடுங்கத் தொடங்கியது.

தேர் தடதடவென்று ஓடி வந்துக் கொண்டிருந்தது. என் தலையோ என் சிநேகிதனின் பிதாவின் கரங்களில் அகப்பட்டு ஆடிக் கொண்டிருந்தது. அந்தப் பையன் என் பின்னல் ஒட்டிக் கொண்டான்.

அவர் என்னை ஒன்றும் கேட்காமல் இருவரையும் நேரே வீட்டிற்கு தரதரவென்று இழுத்துச் சென்ருர்.வீட்டில்வாசலில்என்னை வரவேற்க எத்தனைபேர்?

"டேய்ராஸ்கல்! எங்கேடா சுற்றப்போனய்? திருவிழாப் பார்க்கவா? அல்லது திருமதி பாலாமணியம்மாளை பேட்டி காணவா?—என்று என் அப்பா காதைத் திருகினர்.

"பயலே நீதான் கெட்டு குட்டிசுவர் ஆனது இல்லாமல் அவனையுமா இழுத்துக்

கொண்டுகிளம்ப ஆரம்பித்து விட்டாய்? இனிமேல் இப்படியெல்லாம் போகமாட்டாயே. மாட்டேன் என்று சொல்லு" என்று என் அம்மா முதுகைப் பிளந்துவிட்டார்.

"ஓய்தாஸரே! உமது பிள்ளையைக் கண்டித்து வையும். அவன்தான் படிப்புஎன்பது இல்லாமல் பாட்டு, கூத்து என்று திரிகிறான். மற்ற குழந்தைகளையும் பாழாக்கத் தொடங்கிவிட்டானே." என்று என் தந்தையிடம் சீறினார்.

"ஹூம்....நட. இனி இந்த தேவுவோடு உன்னை எங்காவது பார்க்கட்டும். அந்த இடத்திலேயே உரித்துவிடுவேன் தோலை" என்று அதட்டி அந்த பையனை அழைத்துக் கொண்டு நடந்தார் அவர். உள்ளே செல்லவும் முடியாது, வெளியேவும் ஓடிவர முடியாது ஆடு திருடிய கள்ளன்போல் விழித்து நின்றேன். வாயே திறக்காது மிஷின்போல் என் காரியங்களை செய்துகொண்டிருந்தேன்.

நாட்களும் தன் வேலையை சலனமின்றி நடத்தி ஓடிக்கொண்டேயிருந்தது.

பாலாமணியைப் பார்த்ததும் அவளிடம் பேசாது வந்துவிட்டது மட்டும் எனக்கு மனதில் மிகவும்கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஏக்கப் பெருமூச்சை விட்டு விட்டு வாடிக் கொண்டிருந்தேன்.

பள்ளியில் தலைவிதியே என்று உட்கார்ந்திருக்கும் நேரம்தவிர, மற்றபொழுதை கோவில் பின்புற தோட்டத்தில் சிந்தனையின்பால் மனதை செலுத்தி கழித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயம்தான் ஒருசிநேகிதன் அந்த சுப சமாசாரத்தைக் கொண்டுவந்தான்.

"தேவு! இந்த ஊருக்கு ஏதோ ஒரு நாடக கோஷ்டி வரப்போகிறதாம். தண்டோரா போட்டான் என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்"- என்றான்.

"என்ன! நாடக கோஷ்டியா! நம் ஊருக்கா!" என்று குதித்தெழுந்தேன். துள்ளி துள்ளி குதிக்க ஆரம்பித்துவிட்டேன்.

'ஹூம்....என்னை வெளியூருக்குத்தான் போகாமல் தடுக்கமுடியும் இவர்களால்? இங்கேயே வந்துவிட்டதே என்னருமைநாடகம்' என்று இறுமாந்து பூரித்தேன்.

உடனே ஒரே ஓட்டம் எடுத்தேன். அந்த கொட்டகைஎந்த இடத்தில்போடப் போகிறார்கள்? நம்வீட்டிற்கு அருகில் இருக்குமா? என்று ஆராய்ந்தேன்.

அன்றிலிருந்து இரவு பகல் தூங்காது நாடக பாத்திரங்களை என் கற்பனை உலகில் அவர்களைக் கண்டுகளித்துக் கொண்டிருந்தேன். "அந்த நாளும் வந்திடாதோ?" என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நாடகமும் தொடங்கியது. வெற்றிகரமாக ஓடத் தொடங்கியது. முதல்நாளே கம்பியை நீட்டஎண்ணி முஸ் தீப்பு போட்டிருந்தேன். நாடகம் ஊரில் தொடங்கிய தும் எனக்கு காவல் பலமா யிற்று.ஹூம்.... இந்த காவல் என்னை என்ன செய்கிறது பார்க்கலாம்?" என்று மன திற்குள் நானே சவால் விட் டுக்கொண்டேன்.

மறுநாள் வாயு பகவான் மீதுபழியைப்போட்டு,"காற் றே வரவில்லை" என்ற பல்ல வியைப் பாடிவிட்டு, வாயிற் திண்ணையில் அடைக்கலமா னேன்.

வீட்டிலுள்ளவர்களை ஒரு நாடகம் நடத்தி ஏமாற்றி வெற்றி பெற்றது போன்ற உணர்ச்சியுடன் வெற்றி வீரன் கிளம்பினேன். டிக் கட்டுக்குப் பண மில்லையே என்ற கவலை என்னிடம் உதிக்கவேயில்லை. சமயம் பார்த்து கும்பலில் கோவிந் தாஎன்றுஉள்ளேநுழைந்து விட்டேன். நாடகத்தைமெய் மறந்து ரசித்தேன். எதிரில் நாளும்ஆடத்தொடங்கினேன் என்றால் மிகையாகாது. போனதிருடன்வந்தவழியே விடிவதற்குள் வீடு வந்து சேர்ந்து தூங்கவும் ஆரம் பித்துவிட்டேன். "பாவம்! தேவு இப்போதெல்லாம் சொன்னப் பேச்சைக்கேட் கிறான்.நன்றாக தூங்குகிறது' என்றுவீட்டில்பேசிக்கொள் வதைக் கேட்டுக்கொண்டே சாதுதேவு படுத்திருந்தேன்.

(தொடரும்)

# ஏமாற்றம்

— தஞ்சை பி. வி. ராமன் —

★ ★

"ஸார்" என்ற குரலைக் கேட்டு அறை குறையாய் படித்துக் கொண்டிருந்த 'வாழ் வது எப்படி' என்ற புத்தகத் தை அப்படியே வைத்து விட்டு வெளியில் வந்து பார்த்தாள் கௌரி. வெளியில் நின்று கொண்டிருந்தவரைப் பார்த்த தும் சட்டென்று தலையை உள்ளே இழுத்துக் கொண் டாள். இருபத்தி ஐந்து வயது மதிக்கத் தக்க ஆடவர் ஒருவர் வெளியில் நின்று கொண்டிருந் தது தான் அதற்கு காரணம். விறு விறு என்று உள்ளே ஓடினாள்.

"அம்மா அப்பாவை யாரோ தேடிக் கொண்டு வந்திருக் கிறார்" என்றாள். காமாக்ஷி அம் மாளும் தன் அடுப்புக் காரி யத்தை அப்படியே போட்டு விட்டு வெளியில் வந்து பார்த் தாள்.

"ராஜாமணி ஐயர் இருக் கிறாரா?" என்றார் வந்திருந்த இளைஞர்.

"அவர் ஊரில் இல்லை. வரு வதற்கு இரண்டு தினங்கள் ஆகும்" என்றாள் காமாக்ஷியம் மாள்.

தான் பிறகு வந்து பார்த்துக் கொள்வதாக கூறி விட்டு திரும்பினார் இளைஞர். காமாக்ஷி யம்மாளும் தன் அடுப்பு வேலை யை பார்க்கச் சென்று விட் டாள். அதுவரை கதவு இடுக் கின் வழியாக முன் அழகை ரசித்துக் கொண்டிருந்தகௌரி பின் நடை யழகை கண்டு ரசிக்க வாயிலிற்கு வந்தாள். அந்த இளைஞர் வாசல் கேட் டை தாண்டு முன் கௌரியை ஒருமுறை திரும்பிப்பார்த்தார்.

அந்தப் பார்வையில் தான் எத்தனை விநோதம்! அந்த இளைஞர் சென்றுவிட்டார். ஆனால் கௌரியின் மனதை மட்டும் விட்டு செல்லவில்லை.

மறுபடியும் தான் விட்டுச் சென்ற 'வாழ்வது எப்படி' என்ற புத்தகத்தைத் தொடர்ந்து படிக்க முற்பட்டாள். அவளுடைய கண்கள் மட்டும் புத்தகத்தில் பதிந்திருந்ததே ஒழிய மனத் திராசு இரண்டு ஜீவன்களை எடை போட்டுக் கொண்டிருந்தது. ஒன்று மாமா பையன் சேகர். மற்றொன்று வந்திருந்த இளைஞர். வந்துபோன இளைஞரின் எடைதான் அதிகமாக இருப்பது போன்று தோன்றியது அவளுக்கு.

வந்து போனவரின் அழகைக் கண்டு மயங்கும் இந்த கண்கள், காதல் உறவை எண்ணி வாடும் நெஞ்சம், சேகரைக் கண்டால் மட்டும் ஏன் தன் வேலையை செய்ய மறுக்கின்றது. அதற்கும் காரணம் இல்லாமலா போய்விடும். அதை எண்ணிப் பார்த்தது அவள் மனம்.

அப்பொழுது சேகர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் கல்லூரியில் விஞ்ஞான சம்பந்தமாக ஏதோ பரிசோதனை நடத்திக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த பரிசோதனையில் ஏதோ ஒன்று வெடித்து விஷப் புகை சேகரின் கண்களில் புகுந்து விட்டது. உடனே சேகர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். சிகிச்சை நடத்தப்பட்டது. அதன் பலன் சேகரின் கண்களில் ஒன்று தப்பியது. ஒன்று பார்வை இழந்தது. இதை அறிந்த சேகரின் பெற்றோர் துடித்தனர். கண்ணீர் பெருக்கினர்: அப்பொழுது கௌரியும் அருகில் இருந்தாள். மனம் வருத்தம் அடையத் தான் செய்தாள்.

கௌரியின் மனதில் மற்றொரு எண்ணம் தோன்றியது. 'சேகர் ஒரு கண் பார்வை இழந்ததால் அவனுக்கு இனி வாழ வகையேது' என்று எண்ணினாள். அத்துடன் சேகரை மறந்தாள். அதுதான் அவளின் கடைசி முடிவு போலும்! தனக்கு மாமன் மகன் இருப்பதைப்பற்றி எவரேனும் கேட்டுக்கொண்டு வந்தால் அவளுக்கு எட்டிக் காயாக இருக்கும். அந்த அளவிற்கு வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டுவிட்டாள் அவனிடம்.—இல்லை. — ஆண்டவன் கௌரி வெறுப்புக் கொள்ளும் அளவிற்கு சேகரின் கண்களில் ஒன்றை பார்வை இழக்கச் செய்துவிட்டார்.

"கௌரி சாப்பிட வரவில்லையா" என்று கேட்டதும், "இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு சாப்பிடச் சென்றாள். சாப்பிடும் பொழுது ஒவ்வொரு பிடியிலும் சேகரின் உருவம் தோன்றி மறைந்து கொண்டிருப்பது போல் தோன்றியது அவள் மனதிற்கு. சேகரின் நினைவு எங்கே மீண்டும் தன் மனதில் ஒட்டிக் கொண்டு விடுமோ என்று அஞ்சி அறைகுறையாய் சாப்பிட்டதும் சாப்பிடாததுமாய் எழுந்துவிட்டாள்.

இரண்டு தினங்கள் கழிந்தன. அன்று காலை ராஜாமணி ஐயர் வந்தார். வந்ததும் முதல் வேலையாக கௌரிதான்,

"இரண்டு நாளைக்கு முன்பு தங்களை யாரோ தேடிக் கொண்டு வந்தார்'' என்றாள்.

அன்றும் அதே நபர் ராஜாமணி ஐயரை பார்க்கவந்தார். ராஜாமணி ஐயரும் அந்த நபரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். கௌரிக்கு இருப்புக் கொள்ளவில்லை. கதவின் இடுக்கு வழியாக வந்த நபரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரத்திற் கெல்லாம் அந்த நபர் விடைபெற்றுச் சென்றுவிட்டார். ராஜாமணி ஐயரும் வந்த நபரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தார். அவள் மனம் வந்த நபரைப்பற்றி அறியத் துடித்தது. அதற்கு ஆதரவாக காமாக்ஷியம்மாள், "வந்துவிட்டுப் போனது யார்?'' என்று கேட்டுக்கொண்டே கூடத்திற்கு வந்தாள்.

"அவன் என் காரியாலயத்தில் வேலை பார்க்கிறான். ஏற்கனவே சென்னையில் வேலை பார்த்து வந்தான். தற்பொழுது இங்கு மாற்றலாகி இருக்கிறது. ஹோட்டலில் தான் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறான். பெயர் மூர்த்தி'' என்று விஷயம் பூராவற்றையும் கூறினர்.

காமாக்ஷி மனதில் சபலம் உதித்தது. "ஏன்னு, நம்ம கௌரிக்கு இந்தப் பையனைப் பார்த்தால் என்ன?'' என்று கேட்டுவிட்டு தன் கணவரின் வாயிலிருந்து வரும் மறுமொழியை கவனித்துக் கொண்டிருந்தாள் வெகு ஆவலுடன்.

கௌரிக்கு பார்க்கவேண்டும் என்றவுடனேயே ராஜாமணிஐயருக்கு ரௌத்ராகாரமாய் வந்துவிட்டது. கோபம் "கண்ணுக்கு அழகாய் நல்ல வேலையில் நம் சேகர் இருக்கும்பொழுது இவனை ஏன் பார்க்கவேண்டும்?'' என்றார்.

"கண்ணிழந்தவனுக்குக் கட்டிக் கொடுத்துவிட்டு பின்னல் அவதிப் படப்போகிறவர்கள் யார்? நாம்தானே. கௌரி புக்ககம் சென்றால், 'யார்! சேகருடைய மனைவியா இது! கண்ணிழந்தவனுக்கா இந்த மனைவி...எங்கோ வாழ்க்கைப் பட வேண்டியவள் தப்பித் தவறி சேகருக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டாள்' என்று பலர் கூறும்பொழுது கௌரியின் மனம் என்ன பாடுபடும். வீணுக கௌரியின் மனத்தை புண்ணடிப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை'' என்று கூறி அங்கலாய்த்துக் கொண்டாள்.

"அவன் கண் இழந்தவனுனாலும் ஆண்பிள்ளை. வேலையும் பார்க்கிறான். தன்மட்டிற்குப் போதும். பிறர் குறை கூறாத அளவிற்கு வாழ்க்கை நடத்திவிடுவான். இதேபோல் நம் பெண் கௌரிக்கு ஏற்பட்டிருந்தால், அப்பொழுது எவன் இவளை கட்டிக்கொண்டு மாரடிப்பான். அவளையும் தானே உலகம் தூற்றும். அதை எண்ணிப் பார்த்தாயா? அதென்னமோ எனக்கு சேகருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று படுகிறது'' என்றார்.

"அதைப்பற்றி எனக்குத் தெரியாது. வாழப்போகிறவள் அவள். அவள் வாழ்க்கையை வீணக்காமல் தாங்கள் என்ன செய்தாலும் சரி.''

"எனக்கென்ன வந்துவிட்டது. நாளைக்கே அந்தப் பையனைக் கண்டு கேட்கிறேன்'' என்றார்.

மறுநாள் காலை மூர்த்தியை சந்தித்து தன் மனைவி கூறியதையும், தன் பெண் விரும்பியதையும் தெரிவித்து, தனக்கு என்னவோ இதில் இஷ்டமில்லை யென்றும், அதற்கு காரணமான சேகரைப் பற்றிக் கூறி, தான் இம்மாதிரி நேரிடையாக முகத்தை முறித்தாற்போல் கூறியதற்கு தன்னை மன்னிக்கும்படி கூறினார். பிறகு ஒரு திட்டம் வகுத்து அதன்படி மூர்த்தியை செய்யும்படி கூறினார்.

இதற்குள் ராஜாமணி ஐயருக்கு சேலத்திற்கு மாற்றலாகி விட்டது. அன்று புகைவண்டி நிலையத்திற்கு அவரை வழியனுப்ப எல்லோரும் மூர்த்தி உள்பட வந்திருந்தனர். வண்டி புறப்படும் சமயம் மூர்த்தி ராஜாமணி ஐயரை கண் ஜாடை காட்டி பிளாட்பாரத்திற்கு அழைத்தான்.

"தங்கள் திட்டப்படி தானே?'' என்றான்.

"ஆமாம், மறந்துவிடாதே'' என்றார்.

வண்டியும் புறப்பட்டுவிட்டது. ராஜாமணி ஐயரை சேலத்திற்கு மாற்றலாகி தினங்கள் பதினைந்தும் கழிந்துவிட்டன.

ஒரு நாள் வாசலில் தபால்காரன் கடிதம் ஒன்றை போட்டுவிட்டுச் சென்றான். கௌரி வெகு வேகமாக ஓடிச்சென்று தபாலை எடுத்துவந்து தந்தையிடம் கொடுத்தாள். அது மூர்த்தியின் கடிதம்.

திருச்சி.

ராஜாமணி ஐயர் அவர்களுக்கு,

மூர்த்தி நமஸ்காரம். இப்பவும் இதுகாறும் தங்களிடம் இருந்து கடிதம் இல்லாதது ஏன்? தாங்கள் கூறியபடி தகப்பனுருக்கு கடிதம் எழுதிக் கேட்டதில் நேற்றுதான் பதில் வந்தது. அதில், 'கண்ணுக்கு அழகாக உன் அத்தை பெண் மீனு இருக்க ஏன் மற்றொரு பெண்ணை தேடவேண்டும். வீட்டில் உனது கடிதம் வந்தபொழுது உன் அத்தையும் இருந்தாள். கடிதத்தைக் கண்டுவிட்டு மிகவும் வருத்தப்பட்டாள். ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு வந்துவிடு. நாள் பார்த்து கலியாணத்தை முடித்துக்கொண்டு போய்விடலாம்' என்று எழுதி இருக்கிறார். வேறு விசேஷம் இல்லை. தங்களுக்கு ஜாதகம் கொடுக்க முடியாமற் போனதற்கு மன்னிக்கவும்.

நமஸ்காரம்,

மூர்த்தி.

அந்தக் கடிதத்தை பெண் கௌரியிடம் கொடுத்துவிட்டார். அவள் கடிதத்தை படித்துவிட்டு அழுதாள். பிரயோஜனம்?

காலச்சக்கரம்சுழன்றது.பண எடை காரணமாய் ஒரு வரனும் சரிபடவில்லை. காமாக்ஷியம்மாள் மனம் மாறியது. மீண்டும் சேகரின் பெற்றோருக்கு கடிதம் எழுதலாம் என்று தெரிவித்தாள். அதற்குராஜாமணிஐயர், "எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. சேகரின் பெற்றோர் ஒன்றும் நினைக்காவிடினும், சேகர் படித்தவன், என்ன நினைத்துக் கொள்வானோ, சம்மதிப்பானோ என்னவோ?'' என்றார்.

"ஏதாவது எண்ணிக் கொண்டு சம்மதிக்காவிட்டால் அதுவும் நம் தலையெழுத்து என்றுதான் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றாள் காமாக்ஷியம்மாள்.

அன்றையதினமே சேகரின் தகப்பனருக்கு கடிதம் எழுதி

னர் கௌரியை சேகருருக் கொடுப்பதுபற்றி கேட்டு.

சேகரின் தகப்பனர் சேக ரிடம் கௌரியைப்பற்றிக் கேட் டார். அவன் மனம் சொல் லொணுத வேதனையில் மூழ்கி யது. இவ்வளவு நாள் கண் ணுக்கெட்டாத, பயன்படாத பொருள் என்று பாழுங் குழி யில் எறிந்துவிட்டு மீண்டும் அதை எடுத்து பயன்படுத்த முயல்கிருர்களே என்ற ஆத் திரம் ஒரு பக்கம். மற்றொரு பக்கம் அவர்களின் நிலை இவ் வாறு ஆனதைப்பற்றி மனம் வருந்தினன். தானே கடிதம் எழுதிவிட்டான் கௌரியின் பெற்ருேருக்கு.

சென்னை.

அத்திம்பேர் அவர்களுக்கு,

சேகர் அநேக நமஸ்காரம். தங்க ளின் கடிதம் கிடைத்தது. நான் ஒரு கண் பார்வை இழந்தவன். சொல்லப் போனல் நான் குருடன் என்றே கூறு வேன். நான் படுகிற அவமானம் போதாதென்று என்னுடன் சேர்ந்து உங்கள் பெண் கௌரியுமா அந்த அவமானத்தில் பங்குகொள்ள வேண் டும். என் வாழ்வு இப்படியே கழியட் டும். ஆதலால் கௌரிக்கு நல்ல இடமாக பார்த்து கல்யாணம் செய்து வையுங்கள். என்னுல் தங்கள் பெண் ணிற்கு அவமானம் வேண்டாம். நான் இனி கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை. என் பெற்ருேரும் இந்த உடன்பாட்டிற்கு சம்மதித்துவிட்ட னர். என்னை மன்னிக்கவும். மேற் கொண்டு என்னை தொந்திரவு செய்ய வேண்டாம்.

நமஸ்காரம்,
சேகர்.

இந்தக் கடிதத்தைப் பார்த்த ராஜாமணி ஐயர் கல்லாய்ச் சமைந்துவிட்டார். காமாக்ஷி யம்மாள் சொல்லமுடியாத வேதனையில் ஆழ்ந்துவிட் டாள். பெண் கௌரியோ எதையோ பறிகொடுத்தவள் போல் ஆனுள்.

எட்டி உதைக்கப்பட்டதை காலடியில் மீண்டும் நிற்கச் சொன்னல் நிற்குமா? எல்லாம் விதியின் சதி தான்.

ராஜாமணி ஐயர், முறைப் பையன் இருக்க மற்றொருவனை விரும்பும் கௌரியின் எண் ணத்தை மட்டம்தட்ட வேண் டும் என்று எண்ணி மூர்த் தியை அவர்களின் பெற்ருேர் இந்த திருமணத்திற்கு சம்மதிக்காததுபோல் கடிதம் எழுதச்சொல்லி சதித்திட்டம் செய்ததை காமாக்ஷி அம் மாளோ! அல்லது கௌரியோ! அறிவார்களா? ஆனல் இவர் செய்த திட்டம் இவருக்கே மறுபக்கம் பலன் அளிக்காமல் போகும் என்பதை இவர்தான் முன்னமேயே அறிந்தாரா?நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறது.

●

### உத்யோக உயர்வு

சிறுவன்:—அம்மா! மன்னி நாளைக்கு ஊர்லேர்ந்து வந் துட்ராளே... இனிமே உனக்கு வேலையே இருக்காது. இல் லையம்மா!...

தாயார்:—ஆமாம்டாப்பா... இனிமேஎனக்கு வீட்டுவேலை மன்னி காரியம், குழந்தைகள் காரியம் எல்லாம் சேர்த்து எனக்கு உத்யோக உயர்வு ஆகபோர்து!

# ★பாரதப் பூங்கா★

—வசுமதி ராமசுவாமி—

★

பாண்டவர்களும் கௌரவர்களும் வித்தை கற்பித்த குருக்ருபாச்சாரியார் ஒரு பரீக்ஷை நடத்த விரும்பினார். இருவருக்குமிடையே ஒரு போட்டி வைத்தார். பெரிய மைதானத்தில் பொதுமக்கள் கூடினர். போட்டி ஆரம்பமாயிற்று. அர்ஜுனன் தன்னுடைய திறனை அபாரமாகக் காட்டினான். துரியோததனால் அவனுக்குச் சரியாக நிற்கக்கூட முடியவில்லை. அர்ஜுனன் வில் விடும்போது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். துரியோதனன் தோற்றுவிடும் சமயத்தில் ஒரு இளைஞன் தோன்றினான். அவன் முகத்தில் ஒளி வீசியது. புஜங்கள் உருண்டு திரண்டிருந்தன.

அவன், "அர்ஜுனா! உனக்குத் தெரிந்த வித்தைகளுக்கு மேல் எனக்குத் தெரியும். ஒரு கை பார்க்கிறேன்" என்றான். எல்லோரும் அந்த புது வாலிபனை ஆவலுடன் பார்த்தார்கள். அர்ஜுனனுக்கு நிகராகத் தோன்றும் அவன் யாரென்று ஒருவருக்கும் தெரியவில்லை. துரியோதனன் அவனை சேர்த்துக் கட்டிக்கொண்டு, "நண்பா! உற்ற சமயத்தில் என் கௌரவத்தைக் காப்பாற்ற நீ வந்திருக்கிறாய். இன்றிலிருந்து நீ என் வலக்கரம் போன்றவன்" என்று அன்புடன் சொன்னான். கூட்டத்தில் இருந்த குந்தி வந்திருப்பவன் தன்மகன் கர்ணன் என அறிந்து மூர்ச்சை ஆகினாள்.

கிருபாச்சாரியர் "தம்பி! அரசகுமாரனை அர்ஜுனனுடன் அவ்வளவு சுலபமாகப் போட்டியிட முடியாது. உன் பிறப்பு என்ன? இன்றைய நிலை என்ன தாய் தந்தையர் யார்?" என்றார். கர்ணன் தலை குனிந்தான். கர்ணன் தேரோட்டி மகன் என்று தெரிந்து, உடனே துரியோதனன் "இவனை அங்க நாட்டு அரசனாக இப்பொழுதே பட்டாபிஷேகம் செய்கிறேன்" என்றான். எல்லாமறிந்த பீஷ்மன் அதற்கு ஒத்துக் கொண்டார். உடனே, "சிங்காதனம், செங்கோல், கிரீடம், அபிஷேக ஜலம் எல்லாம் தருவிக்கப் பட்டன. துரியோதனன் பலர் முன்னிலையில் கர்ணனை அங்க நாட்டு அரசனாக முடி சூட்டினான். கர்ணன் அந்த நன்றியைக் கடைசிவரை துரியோதனனுக்குச் செலுத்தினான்.

யுத்தம் நடக்கப் போகிறது. அதற்கான ஏற்பாடுகள் இரு பக்கமும் மும்முரமாக நடக்கின்றது. புஜபலத்தில் சமதையான தன் இரு குமாரர்களும் சண்டை யிட்டால் ஒருவன் மடிந்து விடுவானே என்று தாயுள்ளம் தவிக்கிறது. குந்தி இரவில் தன் மகன் கர்ணனைச் சந்திக்கப் போகிறாள். நடுங்கும் குரலில் அர்ஜுனனுடன்போர் புரிய வேண்டாமென்று கெஞ்சுகிறாள். அழுகிறாள். கர்ணன் தன் தாயென்று அறியாமலே வெகுநேரம்வரைப் பேசுகிறான். "வீரன் யுத்தத்திற்கு புறப்பட்டுவிட்டு பின்வாங்க முடியுமா? என்கிறான். கடைசியில் குந்தி உணர்ச்சிப் பெருக்குடன் அவனுடைய தாய் என்கிறாள். தாயென்று அறிந்த கர்ணன் அன்பு பொங்க, அன்னையை அணைந்து கண்ணீர்விடுகிறான்.

தாயும், மகனும் உருகிவிடுகிருர்கள்.

பிறகு கர்ணன் பிறப்பின் ரகசியத்தைச் சொல்லுகிருள். குந்தி தன் மகன் அர்ஜுனனுடன் இனி யுத்தம் செய்ய வர மாட்டானென்று நினைக்கிருள். ஆனல் கர்ணன் அபூர்வமாகப் பேசுகிருன்.

"அம்மா! தாங்கள் அன்று உலகத்திற்குப் பயந்து என்னை பெட்டியில் வைத்து ஓடுகிற ஆற்றில் விட்டீர்கள். அவமான உணர்ச்சி தாய்ப்பாசத்தைவென்று விட்டது. ஆனல் அநாதையாக தேரோட்டி மகனுக வளர்ந்த என்னை துரியோதனன் தன் உடன்பிறப்புக்கு மேல் உயர்வாக ஏற்று ஆதரவு அளித்தான். எனக்கென ராஜ்ஜியத்தையும் கொடுத்தான். அவனுடைய உப்பைத் தின்று இந்த உடல் வளர்ந்திருக்கிறது. அவனுக்கு நன்றி செலுத்துவது என் கடமை" என்ருன்.

குந்தி அவமானத்தால் குன்றிஞள். மகனுடைய பெருமைக்கு தான்சிறுமையா இருப்பது தெரிந்தது. ஆயினும் தாய்ப் பாசம் மேலெழுந்தது. "அப்பா! அன்று கன்னிப் பெண். விவரம் தெரியாமல் செய்தேன். இன்று தாய்ப்பாசத்தில் தடுமாடுகிறேன். நீங்கள் இருவரும் என் இரு கண்கள். ஒரு கண்ணை எப்படி நான் இழப்பேன்" என்று புலம்பிஞள்.

கர்ணன் தாயை தேற்றிச் சொன்ஞன். "அம்மா! ஒருசமயம் நான் அவன் மனைவி இந்துமதியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டு இருந்தேன். வெளியூருக்குப் போயிருந்த துரியோதனன் விரைவில் திரும்பிவிட்டான். நான் இந்துமதியைப் பார்த்து உட்கார்ந்திருந்தேன். கணவன் வருகையைப் பார்த்த அவள் எழுந்தாள். ஆடுகிற சுவாரஸ்யத்தில் நான் அவள் முந்தானையைப் பிடித்து இழுத்தேன். அவள் தலைப்பில் கோர்க்கப் பட்ட நவரத்தின மணிகள் உதிர்ந்தன. இதைப் பார்த்து கொண்டே வந்த துரியோதனன், "இந்து! பாதி ஆட்டத்தில் எழுந்திருக்காதே. உட்கார்ந்து ஆடு" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, உதிர்ந்த மணிகளை கோர்த்தான். வேறு யாராவது அப்படிச் செய்வார்களா? அந்த துரியோதனனுக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன். நீங்கள் என் மனதை கலக்க வேண்டாம்" என கதறினன் கர்ணன். குந்தி துக்கம் தாளாமல் விம்மிஞள். தோல்வியுடன் திரும்பிஞள்.

[கர்ணனுடைய சிறப்புகள் நிறைய இருக்கிறது. அடுத்த இதழில் எழுதுகிறேன்.]

●

**மதிப்புயரம்**

**வாத்தியார்:**—(கோபத்துடன்) ஏண்டா ராமு! ஏன் இவ்வளவு நேரம்...எங்கே சுற்றினய்?

**பையன்:**—இல்லே சார்... உங்க பிள்ளை சீனு பள்ளிக்கிவர அடம் பிடித்தான். மாமி அவனை சமாதானம் செய்து கிளாஸில்உட்கார வைக்கச் சொன்ஞர். அதான் சார்...

**வாத்தியார்:**—(சாந்தத்துடன்) ஓ... அப்படியா...குரு பக்தி நிரைந்த பையன்... போ...உட்கார்.

# ★ குழந்தை மனம் ★

— கே. வி. விஜயலக்ஷ்மி—

★

கோடைகாலத்துக் கடும் வெயில் தாரை உருக்கும் வகையில் கொளுத்திக் கொண்டிருந்தது: அக்கினி பகவானின் கக்குதலால் தவித்துக் கொண்டிருந்த பல ஜீவன்களில் குறிப்பி டத் தக்கவன் ராஜு. ஏன் வயதில் இளையவன் என்பது மட்டுமா? அல்ல. தெருவில் நடமாடும் எல்லோரும் சொகு ஸாக நடந்து கொண்டிருந் தனர். ஆனல்?...தாங்க மாட்டா பாத்திரச் சுமை யோடு, நெருப்பு போன்ற தரையில் செருப்பில்லா காலை பாவ வைக்க முடி யாது, திணறிக் கெஞ்சிக் கொண்டிருந்தன அச்சிறு வனின் கால்கள். வெளி வரட்சியில் நெஞ்சு வரண்டு நா ஒட்டிக் கொண்டு அவனை உபத்திரவப் படுத்தியது. கூவவும் முடியாது தட்டுத் தடுமாறிக் கொண்டே 'எவர் சில்வர் பாத்திர சாமான்... சரிகை பாத்திர சாமான்...' என்று நெஞ்சு கிழியக் கத் தினன். அவன் தலைவிதி அப்படி. உஷ்ணத்தால் தடு மாறிய கால்களில் எழும்பிய கொப்புளங்களின் எதிரொ லியாக உள்ளம் தன் அனு தாபத்தை ஒட்டி உலர்ந்த கன்னங்களில் நீராக வழித் துக்கொண்டிருந்தது. மிஞ்சி மிஞ்சி பத்து, பன்னிரண்டு வயதே மதிக்கத் தக்க அப் பச்சிளம் பாலகன் இத்தனை அல்லல் படக்கார ணம்? வறுமை அவன் குடும்பத் தை பேய் போல் பிடித்து ஆட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

அவனை அறியாது அவன் கண்கள் நிழலை நோக்கி தாவின. நெஞ்சு வலியைச் சமாளிக்க சற்று தொண் டையைஈரமாக்கிக்கொள்ள கூவலை நிறுத்தினன். உடனே? பாவம்! என்ன நடுக்கம்? தனக்கு முன்னே, நல்ல குடையும், அழகான செருப்பும் அணிந்து கொண்டு, எஜமான் செருக் கோடு மிடுக்காக நடக்கும் மனிதன், சிவந்த விழிகள் தன்னை கொடூரமாக நோக் குவதைக் கண்டான்.

மறுநிமிடம் தன் விதி காட்டிய வழியில் நடக்கத் தொடங்கினன். தெருவில் சென்றவர்கள் 'ஐயோ! பாவம். எத்தனை சிறிய பை யன். தாங்கமாட்டாத கனத் தைச் சுமந்துகொண்டு போ கிறது. கல் நெஞ்சக் காரன் —இவன் எப்படி போகி ருன்?' என்று பேசியதும் அவன் செவிகளில் விழத் தான் செய்தது. உடலெல் லாம் வியர்வை சொட்டச் சொட்ட காட்சி யளிக்கும் அவன் "எசமான்! வெய்யில் நடக்க முடியல்லே...கொஞ் சம் நிழலிலே நின்னுட்டு வரேனுங்க....?" என்று தன்னையும் மீறி கெஞ்சி னன்.

முதலாளியோ, சுட்டெரிக் கும் பார்வையை வீசிய

தோடு "ஏன்? ராஜா வீட்டில் பிறந்த பிள்ளையில்லே ...நிழலா வேணும்....நிழலிலேயே நின்னுக் கிட்டிருக்க ஏன் வேலைக்கு வந்தாய்! பணத்தைச் சுளையா வாங்கும்போது இருக்கும் தெம்பு இப்போ எங்கே போச்சு.... கட....வியாபாரம் கெட்டுப் போவுது....ஹூம்" என்று உறுமினன்.

உள்ளே பொங்கிக் கொண்டிருந்த துக்கம் வெளியில் எரி மலையாய் வெடித்தது. பயன் என்ன? அவன் ஏதாவது கேட்க அருகதையுள்ளவனு? கண்ணீர் பெருக்கத்தான் அவனுல் முடிந்தது. நடந்து நடந்து ஓய்ந்த அவனுக்கும் சற்றுநேரம் விடுதலையளிக்க சாப்பாட்டு வேளை குறிக்கிட்டு உதவியது.

தலைச்சுமையை இறக்கி விட்டு தன் எஜமானின் வீட்டு வாயிலிலேயே ஒரு அடி கூட மேலே எடுத்து வைக்க முடியாது அமர்ந்து விட்டான். அவன் உள்ளத்திலிருந்து பெருமூச்சு ஒன்று சீறிக்கொண்டு வந்தது. தனது உள்ளங் காலை எடுத்து நோக்கினுன். அதை நோக்கியதும் அவன் வலி பதின் மடங்கு அதிகமாகியது. செக்கச் செவேலென்ற கொப்புளங்களை தக்காளிப்பழம்போலபாதம் முழுவதும் அள்ளிச்சொறிந்திருந்தாள் பூமாதேவி.

"ஹூம்....இதை என் அம்மா பார்த்தால்...எப்படி துடித்துப் போவாள். ரத்தக்கண்ணீர் சொறிவாள்... ஆதூரத்தோடு மருந்து போட்டு கட்டுவாள்..." என்று வருந்தி வாடினுன். வலியைப் பொருட் படுத்தாது வீடு செல்லலாம் என்றுலும், அங்கு என்ன இருக்கிறது? குடிப்பதற்குக் கூழில்லை. போடுவதற்கு மருந்தில்லை. அவனுல் நினைக்கவே முடியவில்லை.

தனக்குச் சூரியபகவானின் துணை கொண்டு பூமாதேவி அளித்த பரிசை—காலில் உள்ள கொப்புளங்களை—வெறித்து நோக்கினுன். பளபளத்த அப்புண்ணில் அவன் கடந்த கால வாழ்க்கை படக் காட்சியாய் விழுந்தது.

* * *

"ராஜு உன் அம்மா எங்கே? உன் அப்பாரு மோட்டார் காரிலே அகப்பட்டு விழுந்து விட்டாராம். காலிலே நல்ல அடியாம். ஒரே கூட்டம். ஓடு" என்ற சகாவின் அறிவிப்பைக் கேட்ட ராஜு....வீட்டின் உட்புறம் நோக்கி, இதே விஷயத்தை அறிவித்து விட்டு, தன் நிலை தெரியாது ஓடினுன்.

ரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த தந்தையைக் கண்ட தனயன் மயங்கி விழுந்தான். கணவனையும், குழந்தையையும் கண்டு கலங்கி அலறினுள் தாய். அந்தச் சமயம் மனித

தெய்வம போன்ற ஒருவர் ராஜுவின் தந்தையை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். வைத்தியச் செலவைத் தானே முன் போட்டு உதவினார். மனிதர் உயிரோடு பிழைத்து எழுந்தாரே தவிர ஒரு கால் ஊனமாகி விட்டது.

கட்டை வண்டி இழுத்து வேலை செய்த அவருக்கு இனி யார் வேலை கொடுப்பார்கள்? கொடுத்தாலும் செய்யத்தான் முடியுமா? ராஜுவின் தாயார் வேலை செய்யும் வீடுகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டாள். வைத்தியத்திற்கு முன் பணம் போட்ட மனிதர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். இவர்களுக்குத் தானே முன் வந்து ஒரு யோசனை கூறினார்.

"நீங்கள் ராஜுவை என்னிடம் வேலைக்கு அனுப்புங்கள். எவர்சில்வர் வியாபாரத்தில் அவனை உபயோகித்துக் கொள்கிறேன். மாதா மாதம் அவனுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் பாதியை கடனுக்காக கழித்துக் கொள்கிறேன்'' என்றார்.

இதைக்கேட்டதும் ராஜுவின் பெற்றோர் மனம் சரியானயோசனைதான் என்று ஆமோதித்தாலும் தன் சின்னஞ்சிறு மைந்தனை கஷ்டப் படுத்த வேண்டுமே என்று அவர்கள் மனம் ஏங்கியது.

"அப்பா! நான் வேலை செய்கிறேனப்பா.சரிஎன்று அந்த அய்யாவிடம் சொல்லுங்கள். உங்களுக்குப்பதில் நான் சம்பாதிக்கிறேன்" என்று கூறியவாறு குழந்தை ராஜு முன்னே வந்தான். அதற்குமேல் வேறு பேச்சுஒன்றும் அங்கு நிகழவில்லை. அன்றிலிருந்து ராஜு எவர்ஸில்வர் பாத்திரக் கூடையைத் தூக்கும் கூலியாக மாறினன்.

முதலில் வேலை செய்யும் உற்சாகத்தில் அவன் அதை ஒரு கஷ்டமாகவோ, விதியின் தொல்லைஎன்றோ எண்ணவில்லை. அவன் அப்படி எண்ணுதிருக்க பருவமும் அவனுக்கு உதவி புரிந்தது. கோடைப் பருவம் கண்ணெடுத்து பூவுலகை நோக்கும் தறுவாயில் சிறுவன் தவிக்கத் தொடங்கினன்.

காலில் ஏற்பட்ட புண்ணை தன்னருமைப் பெற்றோருக்குச் சுட்டிக் காட்டினன். "அப்பா! எனக்கு ஒரு செருப்பு வாங்கித் தருகிறாயா? வெய்யிலுக்கு செளகரியமாய் இருக்கும்" என்று ஒருநாள் வாய்விட்டுகேட்டே விட்டான்.

தன் மகனின் காயத்தைப் பார்த்த அவர்களது நேத்திரங்கள் கண்ணீரைச் சொறிந்தன. சூரியன் ராஜுவின் பாதங்களைச் சுட்டான். பாதத்தில் ஏற்பட்ட கொப்புளமோ பெற்றோரின் மனதைச் சுட்டு கொந்தளிக்க வைத்து விட்டது. அவர்கள் மனப் புண்ணை ஆற்ற வழி ஏது? தன் செல்வனை கட்டி

யணைத்து கண்ணீர் உதிர்த்தனர். காரணம்? வறுமை-ஏழ்மை. உலகத்தில்ஏற்படுத்தியுள்ள வித்தியாச மனப்பான்மை. இவைகள் தான்.

"ராஜா! என் தேகத்தை செருப்பா உழைத்தாலும் உனக்கு ஒரு அழகான செருப்பு வாங்கித்தருவேன். ஆனால்....வேற்றுமைக் கண்களோடு, மமதைவெறியோடு நம்மை நோக்கும் இச்சமூகத்தின் எதிரில் நாம் செருப்பணிந்து நடக்க முடியாதடா கண்ணு! உன் எஜமானன் உனக்கு முன்னே குடையோடும், செருப்புக் காலோடும் போகும்போது, அவருக்குச் சமமாக நீ அப்படி போகக்கூடாது. நான் என்ன செய்வேன்? பாவத்தைசெய்துஇந்த ஏழைகள் வயிற்றில் நீ பிறந்ததற்கு இந்த சுகத்தைக்கூட உனக்கு அளிக்க முடியாத பாவியாயிருக்கிறேனடா. என்சுகத்திற்காக பாலகனை உன்னைக்கொல்கிறேனடா" என்று கதறினார்.

'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்பது போல் ராஜு சிறியவனானாலும் புத்தி கூர்மை மிகுந்தவன். தன் பெற்றோரது வாயைப்பொத்தினான். கண்ணீரைத் துடைத்தான். "அப்பா! கஷ்டப்படாதீர்கள். கடன் அடையும்வரை தானே இந்தகஷ்டம். ஏழையின் வீட்டில்பிறந்தால் என்னப்பா! நாணயம் தானே வேண்டும். நமக்கு ஒரு நல்ல காலம் வராதா?" என்று தேற்றிக்கொண்டு வேதாந்தம் பேசினான்.

அன்றிலிருந்து தனக்கு ஏற்படும் கஷ்டங்களை தன் பெற்றோரிடம் அவன் முறையிடுவது கிடையாது. கொப்புளத்தில் சுழன்று ஓடிய அவன் கடந்த காலவாழ்க்கை முற்றுபெறும் நேரம்—!

* * *

'ஐயயோ... அப்பா!... அம்மா!' என்ற தீனக்குரல் அவன் எண்ணத்தைப்பறித்தது. குரல் வந்த திசையில் அவன் நயனங்கள் திரும்பின. ஐந்தாறு வயது மதிக்கத்தக்க-ஒரு சிறியகுழந்தை வெய்யிலின் உஷ்ணம் தாங்காது—நிற்கவும் மாட்டாது, ஓடவும் தெரியாது தவித்துக் கொண்டிருந்தது.

இரக்க மனம் படைத்த ராஜு பதறி ஓடினான். அப்படியே அந்தக் குழந்தையை அள்ளிஅணைத்துக்கொண்டு நிழலுக்கு ஓடி வந்தான். குழந்தைவேறு யாருமல்ல! ராஜுவின் எஜமானனின் மகன்தான்.

"ஆ! ராஜு! நீயா. அப்பாடி நீ வந்து என்னைத் தூக்காவிடில் நான் செத்தேபோயிருப்பேன். அப்ப....! கால் எரியுதே" என்றது அக் குழந்தை.

"உள்ளே வாப்பா... அம்மாவைக் கேட்டு மருந்து போடுகிறேன்." என்று கூறியவாறு அப்பையன் கையிலிருந்து பையை வாங்கிக் கொண்டான்.

அப்பையனை நாற்காலியில் தூக்கி உட்காரவைத்து விட்டு உள்ளேஓடிச்சென்று மருந்துடன் திரும்பினன்.

அவனைத்தொடர்ந்து அக்குழந்தையின் தாய்—ராஜூவின் எஜமானி - தன் மகனுக்கு என்ன ஆபத்தோ என்று பதறி ஓடிவந்தாள். மருந்துபோட எத்தணிக்கும் சமயத்தில் ராஜூவின் கையிலிருந்து அதை பறித்து தானே தன் செல்வனுக்கு இதமாக இருக்கும் வகையில் தடவினள். குழந்தையைக் கொஞ்சினள். மூத்துமாறிப் பொழிந்தாள். தின்பண்டம் கொடுத்து திணறவடித்தாள். படுக்கை விரித்து உறங்கவைத்தாள். பிறகு தான் அந்ததாய் தன்வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

ராஜூவின் உள்ளம் ஏக்கத்தால்வாடியது. இந்த அம்மாவிற்கு இவர்கள்குழந்தை எப்படி இனிக்கிறதோ அப்படித்தானே நானும் என் அம்மாவிற்கு தித்திப்பேன். ஆனல் பணத்தால்தன்குழந்தையின் மனதைக் குளிர வைக்க முடிகிறது. கஷ்டத்தைத் துடைக்க முடிகிறது. எங்கிலே அப்படியா? அம்மாவின் அன்புதான் எனக்கு அருமருந்து என்று எண்ணித்தவித்தது அவன் உள்ளம்.

தட்டி உறங்கவைத்த பையன் உறங்கினனு? இல்லை! தாய் சென்றதும் விழித்துக்கொண்டு,'ராஜூ! இப்படிவா ஏன் அங்கு நிற்கிருய்?' என்று ஆதாரத்தோடு அழைத்தான் அப்பாலகன்.

"ஏம்பா! சிறிது நேரம் தூங்கு. அப்போதுதான்வலி போகும். பாவம்! கால் எப்படி சிவந்துபோச்சு"

"ராஜூ நீ ரொம்ப நல்லவன். நீவந்து என்னை அப்போது தூக்கி யிராவிடில் வெய்யிலில் அப்படியே சுருண்டு போயிருப்பேன்"

"உனக்குத்தான் செருப்பு இருக்கிறதே அதைப்போட்டுக் கொண்டு போவது தானே. உனக்கு இந்த சூடு தாங்குமா?"

"ஆமாம் ராஜூ! செருப்பை அவசரத்தில் மறந்தே போய்விட்டேன்" என்ருன் அவன். சிறிதுநேரம்அவன் இளம் முகம் சிந்தனையின் பால் சென்றது. "ராஜூ! நீ தினமும் அப்பாவோடு பாத்திரம் தூக்கிச் செல்லும் போது செருப்புப் போட்டுக் கொண்டு போகிருயோ?"

"இல்லேப்பா...." அவன் நெஞ்சு துக்கத்தால் அடைத்தது.

"என்ன? இல்லையா? என்னல் இன்று ஒருநாளே நடக்கமுடியவில்லையே. நீ எப்படி நடக்கிருய்? கால்சுடவில்லை? கொப்புளம் எரியவில்லை? இவ்வளவு பெரியவர் என் அப்பா, அவரே செருப்பில்லாமல் கொடை யில்லாமல் வெளியில் கிளம்புவதில்லை. எங்கே! உன் காலைக் காட்டு" என்று படபடத்தான்.

"ஒண்ணுமில்லேப்பாஎன் காலில். நடந்து நடந்துபழக் கமாய் விட்டது" என்று மறைத்தான் ராஜு.

"ஏன் ராஜு! நீ செருப்பு வாங்கிக் கொள்வதுதானே? ராஜு! அழுகிறயா? ஏன்? உன்னிடம் பணமில்லையா?"

'ஹூ ஹூம்' என்று அவன் தலையசைத்தான்.

"இல்லேதம்பி.வயிற்றைக் கட்டிபணம் சேர்த்து செருப் புவாங்கினலும், நாங்களெல் லாம் போட்டுக் கொண்டு நடக்கக்கூடாது. உங்க அப் பாப் போன்ற எஜமானரு எதிரிலே போட்டுக்கலாமா? அதனல்தான்"

"அதனலா!... வேடிக்கை யாயிருக்கு. ராஜு உன் கால்..." என்று அந்தப் பை யன் வார்த்தையை முடிக்கு முன் அவன் கண்டத்திலி ருந்து 'வீல்' என்று குரல் பாய்ந்துஉடைந்தது. ராஜு வே நடுங்கிவிட்டான்.

"அம்மா! அம்மா! சீக்கி ரம் வாயேன். ராஜுவின் காலைப் பாரேன். மருந்து கொண்டுவா" என்று வீறிட் டான் ராஜு எத்தனை அடக்கியும் அவனைத் தடுக்க முடியவில்லை.

இவர்கள் சம்பாஷணை முழு வதையும் கதவிடுக்கில் நின் று கவனித்துக் கொண்டி ருந்த அவளது மனமே துக் கத்தால் விம்மி, கருணையை வடிக்கத் தயாராயிருந்தது. பையனின் கூச்சலால் உந் தப்பட்ட அவள் உள்ளம், உடலைத் தள்ளி ஒரு நொடி யில் மருந்து கொண்டுவரச் செய்தது.

ராஜுவின் உள்ளங்கால் உஷ்ணத்தால் வெந்து, வெதும்பியிருக்கும் நிலையை கண்டதும் அவள் மனம் உடைந்துவிட்டது. ரத்தக் கண்ணீர் பெருக்கினுள். தானே அவனுக்கு ஆதாரத் தோடு மருந்து போட்டாள். அப்போதுதான் தன் கண வரும், தாங்களும் ஒரு சிறு வலை இத்தனை நாளாக வதைத்து உறைக்கத் தொ டங்கியது.

"தம்பி! இப்படி வா" என் று உள்ளே அழைத்துச் சென்றாள். வெய்யிலுக்கு இதமாக குளிர்ந்த பானம் கொடுத்தாள். பிறகு ஒரு அறிமுகக் கடிதத்தையும் அவனிடம் நீட்டி, "ராஜு! என் தம்பியின் மளிகைக் கடை உனக்குத் தெரியுமல் லவா? அங்கு ஒரு ஆள் வேலைக்குத் தேவையிருப்ப தாய் நேற்றுத்தான் சொன் னன். இந்த கடிதத்தை அவனிடம் கொடுத்தால் வேலைக்கு வைத்துக் கொள் வான். சிறிய பையனை நீ வெய்யிலில் பாரத்தை சுமந் து இனி அவஸ்தைப் பட வேண்டாமப்பா! மற்ற விஷ யங்களை உன் அப்பாவிடம் பேசுகிறேம்" என்றாள். இதைக் கேட்ட ராஜுவிற் குச் சந்தோஷம் தாங்க வில்லை. தன் காதுகளையே அவனல் நம்பமுடிய வில்லை. குதிபோட்டுக் கொண்டு கடி

தத்துடன் ஓடினான். அப்போது அவனது கால் வலி கூட காற்றில் பறந்து விட்டது.

ராஜூ—பையன் சம்பாஷணையை கதவிடுக்கில் நின்று எப்படி ராஜூவின் எஜமானி கவனித்துக்கொண்டிருந்தாளோ, அப்படியே எஜமானும் அடுத்த அறையில் படுத்தவாறு கேட்டுக்கொண்டிருந்தான்.

அவர்கள் உரையாடல் அவனை உலுக்கி எடுத்தது. தன் குழந்தை மனத்தில் சுரக்கும் இரக்கமும், உள்ளத்தில் எழும் யோசனையும் கூட தனக்கு இல்லையே. இத்தனை நாள் என்ன கொடுமை செய்து விட்டோம்? என்று அவன் நெஞ்சமே அவனைக் குத்திக் காட்டியது.

உடனே எழுந்து மூலை மூலையாக தனது மூத்த மகனின் செருப்புகளைத் தேடத் தொடங்கினான். அவன் குழந்தை அங்கு வந்து, "என்னப்பா தேடுகிறாய்?" என்று செல்லமாக வினவியது. "அண்ணாவின் செருப்பு தேடுகிறேனடா. நீயும் தேடுகிறாயா—ராஜூவிற்கு."

அந்த பையன் கடகட வென்று சிரித்தான். 'ராஜூவிற்குக் கொடுப்பதற்கா? நானே அண்ணா செருப்பு ஒன்று எடுத்துக் கொடுத்துவிட்டேன். இனிமேல் உன்னோடு அவன் எங்கேப்பா வேலை செய்யப் போகிறான்? அம்மாதான் மாமாவின் கடையில் வேலைக்கு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து விட்டாளே" என்று பாடம் போல் ஒப்பித்துவிட்டான்.

அவ்விரு சிறுவர்களின் பேச்சுவார்த்தை வரை கவனித்தானே தவிர பிறகுநடந்த விஷயங்களை அவன் கவனிக்கவில்லை. இப்படி நடக்கும் என்று அவன் ஊகிக்கவும் இல்லை.

குழந்தை வார்த்தை உண்மையாக இருக்குமா? என்ற சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள "நிஜமாகவாடா, கண்ணு!" என்றான்.

அப்போது அங்குபிரஸன்னமான அவன்மனைவி புன்முறுவலுடன் 'ஆமாம்' என்று தலையசைத்தாள்.

"அப்பாடா....என் மனதும் சிறிதுநேரம் படாதபாடு பட்டுவிட்டது. நான் செய்ய வேண்டிய காரியத்தை என்னை முந்திக் கொண்டு, பெண்களுக்குள்ள இயற்கையான இரக்க உள்ளத்தால் நீயே செய்துவிட்டாய்' என்றான்.

"என் செய்கையை சொல்லாதீர்கள். கண்மூடித்தனமாய் நாம் நடந்துகொண்டிருந்த மார்க்கத்திலிருந்து நம்மை மீட்டினவன் இவன் தானே" என்று தன் குழந்தையைச் சுட்டிக்காட்டினாள் அவள்.

"என்ன யிருந்தாலும் குழந்தை மனத்திற்கு எது ஈடாகும்?" என்றுகூறி அத் தம்பதிகள் தங்கள் மைந்தனை அள்ளி அணைத்துஉச்சி முகர்ந்தனர்.

✻

# காளிதாசர் கனவு.

## 11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[மே இதழ்த் தொடர்ச்சி]

மீண்டும் காளிதாசர் கூறினர்: "குமாரதாசா! இராமரும் சீதையும் இலங்கையிலிருந்து திரும்பிப் புஷ்பக விமானத்தில் வந்தபொழுது கங்கை யமுனை சங்கமத்தை நான் விரிவாக வர்ணித்தேன். அந்த வர்ணனை வால்மீகி ராமாயணத்தில் இல்லை. இந்த வர்ணனையைத் தவிர உத்தர காண்டத்தில் சீதையைக் கானகத்திற்கு அனுப்பும்பொழுது இராமருடைய துயர வர்ணனையையும், வால்மீகி ஆசிரமத்தில் சீதையின் துயர வர்ணனையையும் விரிவாகவே என்னால் செய்யப்பட்டது. கருணரச மயமான ராமாயணத்தில் கருணரஸம் மிகவும் ததும்புமிடங்களல்லவா அந்த இடங்கள்!

ஸாஹம் தபஸ்ஸூர்ய நிபத்த த்ருஷ்டி
ரூர்த்வம் ப்ரஸூதேச்சரிதும்யதிஷ்யே |
பூயோய தாமே ஜனனந்தரேபி
த்வமேவ பர்த்தா நச விப்ரயோக: ||

(நான் சூர்யனிடத்தில் பார்வையை வைத்துத் தவஞ் செய்து மறு பிறப்பில் உம்மையே கணவனாக அடைவேன்) என்று சீதை கூறியது பாரத தேச லக்ஷ்யங்களுக்குள் ஒப்புயர்வற்ற லக்ஷ்யமல்லவா? "சாயே வானுகதா சதா" (நிழல்போல் மனைவி கூட வருவள்) என்று வால்மீகி பகவான் கூறியது இதுதான்.

காளிதாஸர் மீண்டும் கூறினர்:

"குமார தாஸா! நேற்றைய தினம் நிஷ்டையில் நான் ஒரு உண்மையைக் கண்டேன். 800 ஆண்டுகளுக்குப் பிறகு பவபூதி என்ற மகாகவி இந்த ஒப்புயர்வற்ற கதையை "உத்தர ராம சரிதம்" என்ற நாடகத்தில் கூறப்போகின்றார். அதில் கருணரஸம் வெகு அற்புதமாக இருக்கும்!"

"பிறகு சீதைக்கு வால்மீகி ஆசிரமத்தில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அந்தக் குழந்தைகளுக்கு வால்மீகி பகவான் குசன், லவன் என்ற பெயர்களை வைத்தார். தன்னால் காவ்ய ரஸமும் கீத ரஸமும் கலந்து இயற்றப்பட்ட இராமாயணத்தை அவர்களுக்குக் கற்பித்தார். அவர்கள் அதை அழகாக பாடுவதைக் கேட்டு சீதைத் தன்னுடைய துயரங்களை யெல்லாம் மறந்தாள்.

"ஒருநாள் அந்தக் குழந்தைகள் தன் சரித்திரத்தையே பாடியதைக் கேட்ட இராமர் அளவற்ற ஆனந்தத்தை அடைந்து அந்தக் காவ்யத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர் என்றறிந்து

அவருடைய தபோ வனத்தையடைந்து அவரை வணங்கினார். அப்பொழுது கருணை நிறைந்த வால்மீகி செல்வர்கள் இராமருடைய புதல்வர்கள் என்றறிவித்து சீதையையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போகும்படி இராமரை வேண்டினார்."

"இராமர் அப்பொழுது கூறினார்: "சீதை அக்கினி பிரவேசஞ் செய்ததை இங்கே உள்ளவர்கள் அதைக் கண்கூடாகக் காணாததால் அவர்களுக்குநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் சீதையை இவ்விடத்திலேயே சபதஞ் செய்யச் சொல்லுங்கள்.''

"அப்பொழுது மகாசபையில் சீதை வந்தாள். அவளைக் கண்டதும் யாவரும் வெட்கி அவளுடைய தூய்மையை ஒப்புக்கொண்டார்கள். சீதையும் சபதஞ் செய்தாள்: "பூதேவி! நான் பதிவிரதையாக இருந்தால் நீ என்னை அழைத்துக்கொள்'' என்று கூறினாள். உடனே பூமி பிளந்தது. ஒரு மின்னல் மின்னியதுபோல் பூதேவி பூமியினின்று ஆவிர்ப்பவித்துச் சர்ப்பங்களால் தாங்கப்பட்டச் சிங்காதனத்தில் இராமரையே நோக்கி நின்ற சீதையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு பாதாளஞ் சென்றாள்.''

"பிறகு இராமர் குசனுக்குக் குசாவதி என்ற நகரத்தையளித்து, லவனுக்கு லவபுரத்தை யளித்தார். பிறகு அனுமானையும் விபீஷணனையும் நித்திய ஜயஸ்தம்பங்களாக வடதிசையிலும், தென் திசையிலும் ஸ்தாபித்து அயோத்தியா வாசிகளுக்கு மொக்ஷமளித்து தம்பிகளுடன் சுயரூப மடைந்து வைகுண்டஞ் சென்றார்.

## குசமகாராஜன் சரித்திரம்.

உலகத்தை ஆட்சிசெய்து வரும்பொழுது ஒருநாள் குசன் நள்ளிரவிலே ஓர் அழகிய தெய்வீக மங்கையைக் கண்டான். அவளை அவன் "நீயார்'' என்று வினவ அவள் "நான் அயோத்தி நகர தேவதை. அயோத்தி ஜனங்கள் யாவரும் ராமருடன் சுவர்க்கம் போனதால் நான் என் பெருமையை இழந்துவிட்டேன். அழகிய பெண்கள் நடக்கும் வீதியில் நரிகள் ஊளையிட்டு ஓடுகின்றன. அவர்கள் இனிமையாக கானம் செய்த வீடுகளில் கோட்டான் சத்தமிடுகின்றன. நல்ல பட்டாடைகள் விளங்கிய இடங்களில் பாம்புச் சட்டைகள் கிடக்கின்றன. மாளிகைகளிலும் கோபுரங்களிலும் புல் முளைத்து ஊர் அலங்கோலமாகிவிட்டது. ஆகையால் நீ இனி அயோத்தியில் ஆட்சி புரியவேண்டும்'' என்று பிரார்த்தித்தாள். குசனும் அந்த வேண்டுகோளுக்கிணங்கிக் குசாவதியை தானமாகக் கொடுத்துவிட்டு அயோத்தியில் ஆட்சி செய்தான். அப்பொழுது, அயோத்தி அழகாலும் பட்டாடையாலும் நகைகளாலும் மனதைக் கவரும் தெய்வீக அணங்கெப்போல் பல வீடுகளுடனும் கடைகளுடனும் விளங்கிற்று.

(தொடரும்)



வை.மு.கோ. 114-வது நாவல்

# கிழக்கு வெளுத்தது

“குட் நைட் அகல்யா...வெகு வெகு சந்தோஷம் விஷயத்தை அம்மா சொல்லி விட்டாள். உன் கணவர் யரோ என்று எண்ணினேன், என் கணவரின் பள்ளித் தோழர் பாஸ்கரன் என்பது தெரிந்ததும் அவ்ரும் பூரித்துப் போனார்', என்று கூறிக் கொண்டே அகல்யாவைக் கட்டித்தழுவினாள். உடனே அவள் எழுந்து “என் கணவரும் வந்திருக்கிறார் இதோ அழைத்துவருகிறேன்” என்று கூறிக்கொண்டே சென்றாள்.

ஆப்த்த சிநேகிதை யானாலும் இந்த சமயம் வீட்டில் பிறர் அலங்கோலமான நிலைமையில் வந்திருக்கையில் வந்து விட்டாளே என்கிற எண்ணந்தான் முதலில் தோன்றியது. எனினும் இத்தனை உத்ஸாகத்துடன் பழய அன்பு மரவாது வந்திருக்கும் பெருந்தன்மையையே எண்ணி சடக்கென்று அவளைப் பின் தொடர்ந்தாள். என்னவிருப்பினும் மனித சுபாவத்தின் ஒரு சில அபூர்வ சக்தியினால் சமயோசித மதியூகம் ஆண் பெண் இருபாலரிடமும் திடீரென்று தோன்றி அதன் மூலம் நன்மையும் சில சமயம் தீமையும் கூட விளைந்து விடுவது இயர்க்கையான செயல். அதே போல் அகல்யாவுக்கு எதனாலோ தன்னுடைய தற்போதிய நிலைமையில் வீட்டில் விருந்தினர் விடுதியில் பிறர் வந்து தங்குவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. ‘தான் மாலையிடப் போகும் கணவரின் அண்ணன் பயித்தியம் என்று பிறர் ஏனரிய வேண்டும் என்பதே அவள் நோக்கம். தவிர மூத்தமருமகளின் கதிலைய அன்னியர் அறிந்தால் எத்தகைய இளைப்பமுண்டாகும். ஒரு வேளை அகிலாண்டம்மாளே வந்து ஏதாவது ரகளை செய்தால் என்ன ரஸாபாஸமாக ஆய்விடும். கடவுள் ஏன் இன்று இந்த சிநேகிதையின் வரவைக்காட்டி என்னைக் கலக்க வேண்டும்’ என்கிற கவலை மனதில் அலைமோதி அந்த வளர்ச்சியின் ரேகைமுகத்தில் பளிச்சிட்டதை பாஸ்கரன் ஒரு நொடியிலறிந்து கொண்டான். பாவம் தன்



183221

குடும்பத்தினாலல்லவா அகல்யாவுக்கு இத்தனை அவமானங்களும் தடுமாற்றங்களும் உண்டாகிவிட்டது. அவளுடைய படிப்பென்ன, அழகென்ன, அந்தஸ்தென்ன எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்ற அவளுடைய உள்ளத்தில் துளிர்த்து மொட்டு விட்டுள்ள அன்புக்கல்லவா ப்ரதானமளித்துள்ளாள். இந்த சமயம் என்னசெய்வது யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்

உடனே அகல்யாவிடம் சென்று... "அகல்யா! உன் முகத்தில் மின்னலிட்டு விளக்கும் பலபல உணர்ச்சிகளின் வேதனையை நானறிகிறேன் ஆனால்..." என்று முடிப்பதற்குள் மிஸ்டர் மேலே எதுவுமே பேச வேண்டாம். அதோ அவர்கள் வருகிறார்கள் என்பதற்குள் தம்பதிகள் ஒய்யாரப் புன்னகையும் கம்பீரத் தோற்றமும் ப்ரகாசிக்க வந்து விட்டார்கள்.

"ஹல்லோ பாஸ்கர்!...மிக மிகச் சந்தோஷம். நீ இங்கு இருப்பதையறிந்து தான் நான் வந்தேன். இன்று தான் உனக்கு நிச்சயதார்த்தமாயிற்றாம். கல்யாணத்திற்கும் கட்டாயம் லீவு வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்"...என்று முன் கூட்டியே அன்பையும் ஆர்வத்தையும் தெரிவித்தான்.

அதே சமயம் பாஸ்கரன் சிரித்துக் கொண்டே "கல்யாணத்திற்கு இன்றே உங்களுக்கு விருந்து சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். கிளம்புங்கள் போகலாம். அகல்யா உன் பெற்றோரையும் அழைத்துக் கொண்டு அமுத பவனத்திற்கு வந்துவிடு. நாங்கள் முன்னதாகப் போகிறோம் அங்கு சாப்பிட்டு விட்டு ஜாலியாக வரலாம்" என்ற வார்த்தையைக் கேட்டதும் அகல்யாவின் இதயத்தில் அமுதமே பாய்ந்தது என்றால் மிகையாகாது. சமயோசிதமதியூகம் ஒரு பெரிய சஞ்சீவியைப் போலவே அமைந்தது. மிக்க சந்தோஷத்துடன் தனது மனச் சாந்தியைத் தெரிவித்துக் கண்களால் பேசி நிம்மதியடைந்தாள்.

அடுத்த வினாடியே பாஸ்கரன் அந்த தம்பதிகளுடன் காரில் ஏறிக்கொண்டு கார்கிளம்பி கேட்டைதாண்டுவதற்கும் பத்ரகாளி தேவிபோல் தலையும் வேஷமும் கண்களில் தீப்பொறி பறக்க அகிலாண்டம்மாள் வருவதை பாஸ்கரனே பார்த்து இடி இடித்ததுபோல் துள்ளினான். தயாரின் குண விசேஷ மகிமை பூராவும் அவனுக்கு மிக மிகப்பழக்கபட்டிருப்பதால் அவளுடைய நடையின் வேகத்தைப் பார்க்கும் போதே ஏதோ பெரிய விபரீதத்திற்குக் தான் இவள் வருகிறாள். இந்த தர்ம சங்கடமான நிலைமைக்கு என்ன செய்வது. இரங்கிப் போகவும் முடிய

வில்லை. அகல்யாவிடம் என்ன ஆர்பாட்டம் செய்து குட்டைகலக்கி விடுவாளோ! அவள் என்ன விழிப்பாளோ? இது என்ன சோதனை என்று தவித்து துடிப்பதற்குள் கார் வெகுதூரம் சென்று மறைந்து விட்டது.

தன் கணவனின் சமயோசித சாமர்த்யத்தை எண்ணி வியந்த அகல்யா கார் செல்லும் அழகையே பார்த்துக் கொண்டு நின்றாள். அதேக்ஷணம் அகிலாண்டம்மாள் வரும் ஆவேசத்தாண்டவத்தைக் கண்டதும் திடுக்கிட்டு ஒரு குலுக்கு குலுக்கி கதி கலங்கச்செய்து சிலவினாடிகள் தம் பித்தே நின்று மரப் பாவைபோலாகி விட்டாள்.

அகிலாண்டம்மாள் அருகில் வந்த பிறகு தான் அவள் சற்று சுயஉணர்வு பெற்று..."வாருங்கள்,வாருங்கள் சொல்லி யனுப்பி இருந்தால் நான் கார் அனுப்பி இருப் பேனே, அம்மா... இங்கேவா...எங்கமாமியார் வந்திருக் கிறார் பாரு..."என்று உரவு முறைவைத்து முன் கூட்டியே பேசியபோது அகிலாண்டம்மாள் முகவாய்க் கட்டையை தோளில் இடித்துக் கொண்டு ஒரு திருப்பு திருப்பினாள். இதையும் அகல்யா பார்க்காமலில்லை.ஆனால் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளாமல் சோபாவில் அகிலாண்டம்மாளை கையைப்பிடித்து தானே இழுத்து உட்காரவைத்தாள்.

உடனே ஸீதம்மாள் பரபரப்புடன் ஓடி வந்து வாருங்கள் வாருங்கள்... ஏது இவ்வளவு தூரம் சொல்லியனுப்பி இருந்தால் நாங்கள் ஓடி வந்திருப்போமே... அகல்யா...ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது. பூமாவுக்கு ஒன்றும் பயமில்லை. அவளைப் பற்றிய கவலைதானே...பாவம்!... எடுத்து வளர்த்துப் பெண்போல வைத்துப் பாவித்த பாசம் வீணாகுமா? அதன் வேதனை ஆட்டுகிறது" என்று தானே கேள்வி, பதில் சகலமும் சொல்லிவிட்டாள்.

இதற்குள் அகல்யா கட்டளை இட ஒரு சமயல்காரன் மல்கோவா மாம்பழத் துண்டுகள், பாதம்கீர், மலைப்பழம் முதலியவைகளை வெகு நாகரீகமாக ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவந்து முன்னால் மேஜைமீது வைத்தான். ஏதோ ஆவேச பூதமாய் வந்துவிட்டாளே யன்றி, என்ன பேசுவது. தடபுடல் உபசாரம் வேறு அமர்க்களப்படுகிறதே? என்று குழம்பிப்போய் அகிலாண்டம்மாள் தவிக்கையில், ஸீதம்மாளுடைய பேச்சில் ஒரு பிடிப்புக் கிடைத்துவிட்டதும் அதையே பிடித்துக்கொண்டு, "ஐயோ! தலைவிதியே. அதையேன் கேட்கிறீர்கள் போங்கள். பூமா என் வயிற்றில் பிறக்காத ஒரு குறையேயன்றி, மற்றபடி ஒன்றுமில்லை. என்னுயிர் துடிக்கும் துடிப்பை அந்த ஆண்டவன் தான் அறியவேண்டும். பரதேசிப் பெண்ணை வளர்த்

தேனே. எங்கே என் தலையில் கல்லைப் போட்டுவிடு வாளோ என்கிற திகில்... அப்பப்பா...சொல்லிமுடியாது" என்பதற்குள் அகல்யா அகஸ்மாத்தாக அகிலாண்டம்மா ளின் கைகளைக் கவனித்துவிட்டாள். ஆஸ்பத்திரியில் சூடாகக் கொட்டிவிட்ட கஞ்சியின் சூடுதாளாமல் கன்னிப் போயிருந்ததில் ஏதோ நீலமாகத் தடவி இருந்ததைப் பார்த்ததும், "இதென்னம்மா கையில்? சாயங்காலம் ஒன் றும் காணவில்லையே? எங்கே என்ன காயம்பட்டது" என்று அன்பொழுகக் கேட்டாள்.

முதலில் என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் சற்று மென்று விழுங்கிப் பின்னர், "ஐயோ, விதியே! இதை ஏன் கேட்கிறாய். இந்தச் சமயத்தில் கஷ்டமாயிருக் கிறது: நல்ல சுபகாரியத்தை மங்களகரமாகச் செய்த போது அந்த அசட்டுப்பெண் ஆரத்தித்தட்டைக் கீழே போட்டதே என் மனத்தில் சுருக்கென்று தைத்தது. இதென்னடா அபசகுனம் என்று எண்ணிவருந்தினேன். பகவானை எல்லாம் ப்ரார்த்தனை செய்தேன். அதுபோதா மல் அந்த துரத்ருஷ்டப் பெண் இப்படியா படுத்துவிட வேணும். மனம் தாளாது ஆஸ்பத்ரிக்கு ஓடினேன்....

அங்கு ஒரு படுபாவி ஆயா சுடச்சுடக் கஞ்சியை பாத் திரத்துடன் பிசாசுபோல் தூக்கிக்கொண்டு வந்து கண் ணும் மண்ணும் தெரியாமல் என்மீது கொட்டி இந்தக் கதி யாக்கிவிட்டாள். எரிச்சல் தாளாமல் இத்தனைநேரம் தவித்துத் தண்ணியாய் உருகிவிட்டேன். ஆஸ்பத்ரியில் விசாரித்ததில் நீதான் இங்கு அழைத்து வந்திருப்பதாகத் தகவல் தெரிந்தது. உடனே ஓடிவந்தேன்....என்ன மோம்மா, மனதே சரியில்லை. கல்யாணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிரு. ஆய்ந்துபார்த்துச் செய்யவேண்டிய காரியம். இதை ஆரம்பிக்கும்போதே அபசகுனங்கள் ஒன்றுபின் ஒன்றாக வந்துவிட்டதால் எங்களுக்கு மனது சற்றுகூட சரியாயில்லை. உடனே இங்கேபோய் சொல்லி கல்யாணத்தை நிறுத்திவிட்டு வா, என்று என் பெரிய பிள்ளையும் அவன் பிதாவும் சொல்லியனுப்பினார்கள். நமக்கு இவ்வளவுதான் ப்ராப்தம். பூமாவை அனுப்பிவிடு. நான் போகிறேன். எனக்குச் சாப்பிட மனது பிடிக்க வில்லை" என்று அழுத்தமாகச் சொல்லும்போது அகல்யா வுக்குச் சிருப்பாய் விந்துவிட்டது. 'மூத்தபிள்ளை இங்கு அலங்கோலமாய்க் கிடப்பது அவளுக்கு எப்படித் தெரியும். பாவம்...ஸீதம்மாவும் அகல்யாவும் பதிலே பேசாமல் நிற்கையில், ஓ....பூமா...பூ...மா...டேய் பாஸ்கரா.... அகல்யா...ஹி....ஹி....ஹி...அடே....டேய் யாரது அம்.... மா...இல்லே...இல்லே. அகிலாண்டேச்வரியம்மா

....அம்மா...அகிலாண்டம். தங்கபெல்டை யார் திருடினூர்கள். சொல்லு...அகல்யா....அம்மாவே போலீஸிலே வைத்து வி...ல...ங்...கு...போடு''... என்று கத்தியபடியே ஜன்னல்கம்பியை ஒரு ஆட்டு ஆட்டி இழுத்தான்.

எங்கிருந்துதான் இந்த யானையின் பலம் வந்ததோ தெரியவில்லை. கம்பி அப்படியே வளைந்துவிட்டதைக் கண்டு அகல்யா கடுநடுங்கிப் போய்விட்டாள். மற்றொரு கம்பியையும் இழுத்து வளைத்துக் கொண்டு இங்கு குதித்து விடப்போகிறானே என்று பயந்து "அப்பா!" என்று கத்தி விட்டாள்.

தன் மகனுடைய இத்தனை லக்ஷணங்களையும் பார்த்து கொண்டு வெளித்துப்போன இகிலாண்டம்மாளின் தலை மீது இடிதான் விழுந்ததா? அல்லது உலகமே தட்டாமாலை சுற்றுகிறதா? என்கிற சந்தேகம் உண்டாகி குலை நடுங்கச் செய்துவிட்டது. அகல்யா எத்தனையோ உன்னத லக்ஷியத்துடன் தன் குடும்பத்திற்குச் செய்துள்ள அத்தனை உபகாரத்தின் அழகையும் அப்படியே மறந்து அவளால் தனக்கேதோ விபரீத ஆபத்து நேர்ந்துவிட்டது என்கிற தீயஎண்ணம் உண்டாகி முன்னிலும்அதிகரித்தஆக்ரோஷமும் ஆவேசமும் ஒன்றுகூடி காளிதேவியைப் போன்ற சீற்றத்தை யடைந்து "ஏய்! அனுமதேயப் பிண்டமே. தேவதாசியின் மகனுக்குப் பிறந்த உதவாக்கரை மனிதனின் உத்யோக ஜம்பத்தினுல் அப்பா...அம்மா...என்று சொல்லிக்கொண்டு, ஊரை ஏமாற்றுவதின்றி, என் கண்ணுன கண்மணி, பாஸ்கரனைப் பாழாக்கி என் குடும்பத்திற்கே பெரும் நாசத்தை விளைவிக்கவா நினைத்தீர்கள். உங்கள் ஊழல் புராணம் எங்களுக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம். முதலில் கதவைத் திறந்து என் மகனை விடுகிருயா? இப்போதே நான் ஊரைக் கூட்டி உங்கள் பவிஷை வெட்ட வெளியாக்கிச் சந்தி சிரிக்கச் செய்துவிடட்டுமா?'' என்று கூறியபடியே சேஷகிரி இருந்த விடுதியின் கதவை ஒரு உதை உதைத்தாள்.

அது வெளிப்புறம் சாதாரணத் தாழ்ப்பாள் போட்டிருந்ததால் சட்டென்று திறந்துகொண்டுவிட்டதும், சேஷகிரி கைகளைக் கொட்டிக்கொண்டு தாயாரின் எதிரே வந்து அவளை அப்படியே நசுக்கிவிடுவதுபோல் கழுத்தைநெருக்க வந்தான். அகிலாண்டம்மாள் சத்தம்போடாமல் ஜடையிலேயே"பணம் மூட்டைகட்டி வைத்திருக்கிறேன். வா....வா'' என்று கையைப் பிடித்து இழுத்தாள். தரதரவென்று இழுத்துக்கொண்டுபோய் வாசலில் வந்து நின்றுள்.

வீதியோடு போகும் ஒரு வண்டியைக் கூப்பிட்டு அதில் சேஷகிரியை உட்காரச்செய்து வண்டிக்காரனை "ஜாக்கிர

தையாக பார்த்துக்கொள்ளு. உடம்பு சரியில்லாதவன். உனக்கு அதிகப் பணம் தருகிறேன்" என்று கூறிவிட்டு, மறுபடியும் உள்ளே வந்தாள். அகல்யாவுக்கு இந்த அவமானச் சொல்லும், அதிர்ச்சியும் தாங்காமல் துக்கம் மீறிக்கொண்டு வந்துவிட்டதால், தன்னைமீறி புலம்பிக்கொண்டிருந்தாள்.

உள்ளே வந்த பைசாசம்போன்ற அகிலாண்டம்மாள் "ஏ பூமா! பூமா...எங்கே படுத்திருக்கிறாய். வருகிறாயா, இல்லையா? இந்தக் குடிகேடி வீட்டில் உனக்கென்ன வேலை. எழுந்துவா" என்று பெரிதாகக் கத்தினாள். இந்தப் பயங்கர குறல் காதில் விழுந்ததுதான் தாமதம். இடியோசையைக் கேட்ட நாகம்போல், பூமா துள்ளித் துடித்து நடுநடுங்கிப்போய் சப்தநாடியும் அடங்கிய நிலையில் துவண்டவாறு மெல்ல எழுந்து தள்ளாடித் தடுமாறி நடந்துவந்தாள்.

ஸீதம்மாவுக்கோ ஒரே ப்ரமையாகத் தோன்றுகிறதே யன்றி சமாளிக்கும் சக்தியுடன் கூடியவிஷயமாகவே தோன்றவில்லை. மூர்ச்சையே போட்டு விழாத குற்றமாய்ச் சாய்ந்தாள். பூமாவின் அலங்கோலத்தைக் கண்டு நெஞ்சமிளகாத அகிலாண்டம்மாள், அவளையும் விழுங்கிவிடுபவள்போல் முறைத்துப்பார்த்தபடியே தடதடவென்று கைகளைப்பிடித்து இழுத்துக்கொண்டு வாசலுக்கு ஓடினாள். அங்கு பார்த்தால் தான் பேசிவைத்த வண்டியோ, தன்மகனை காணவில்லை. பதிலுக்கு நாலைந்துபேர் கும்பலாக கூடி, "ஐயோ! வண்டியை யாரோ ஓட்டத்தெரியாமல் ஓட்டுகிறான். வண்டிக்காரன் துரத்திக்கொண்டுபோகிறான். குதிரையோ தாறுமாறாக ஓடுகிறதே, எந்த விபத்திற்கு இந்த வண்டி இலக்காகுமோ" என்று சொல்வதைக் கேட்ட அகிலாண்டம்மாள் தன்னைமறந்து "வண்டியை சேஷகிரியா ஓட்டுகிறான்?" என்று கூவியபடி பூமாவையும் ஏதோ ஒரு கட்டையை இழுப்பதுபோல இழுத்துக்கொண்டு வீதியில் ஓடத்தொடங்கினாள். இந்த லக்ஷணத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு ஜனங்கள் கூடினார்கள்.

## 11

### குமுறலும் குதூகலமும்.

அகல்யாவின் சிநேகிதையையும், அவள் கணவனையும் ஓட்டலுக்கு அழைத்துச்சென்ற பாஸ்கரனுக்கு அவனுடைய தாயாரை வீதியில் பார்த்தவுடனே நெருப்பை மிதித்தவன்போல் துள்ளினான். என்ன விபரீதம் நடக்குமோ, என்ன விஷயம்

காதில் படுமோ என்கிற திகில்பிடித்து வாட்டுகிறது என்ருலும், கூடச் சொல்லும் சிநேகிதர்களுக்குத் தனது தடுமாற்றம் தெரியாதிருக்கும் பெருட்டு உள்ளே குமுறலும் வெளியில் குதூகலமும் கலந்த நிலைமையில் ஓட்டலையடைந்து சிறிது நேரமாகியும் அகல்யா வராததால் அவனுடைய சிந்தனையில் புயலடிக்கத் தொடங்கியது. ஏதோ பெரிய ரகளை... அமர்களம் நடப்பதால்தான் அகல்யா உடனேவரவில்லை. அம்மா அங்கு என்ன விஷக்காற்றைவீசி பூகம்பத்தைக் கிளப்பிவிட்டாளோ! நாம் போய்ப்பார்க்கலாம் என்ருல் இவர்களும் கூட வருவதாகச் சொல்கிருர்களே. இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வது' என்று நிமிடத்திற்கு நிமிடம் துடிதுடித்தவாறு கடியாரத்தையும் வாசல் வழியையும் பார்க்கிருன்.

கூடவந்திருக்கும் சினேகிதையோ, தான் சென்று பார்த்து வருவதாகக் கூறி கிளம்பும்போது பாஸ்கரனுக்கு பின்னும் பயம் பீறிக்கொண்டு வந்தது. செய்வதரியாது ஏதோ அசடுவழியப் பேசிக்கொண்டிருக்கையில் நல்ல வேளையாய் அகல்யாவின் மற்ருேர் சினேகிதையும் அவள் கணவனும் ஜாலியாகச் சாப்பிட வந்தார்கள்.

ஆனல் பாஸ்கரனுக்கு அவள் அகல்யாவின் சிநேகிதை என்பது தெரியாது விழித்தான். ஏற்கெனவே வந்துள்ள சித்ரா புதிய சினேகிதையை வரவேற்றுப் பேசி "தாரா! என்ன ஆச்சரியம் போ. நீ இப்போது வருவாய். உன்னை நாங்கள் சந்திப்போம் என்று நினைக்கவே இல்லை. இவர் யாரு தெரியுமா? மிஸ்டர் ஐ. ஏ. எஸ். பாஸ்கரன். நமது சினேகிதை அகல்யாவின் கணவர். இன்றுதான் நிச்சயதார்த்தமாயிற்ரும். தற்செயலாக நாங்கள் வந்ததால் இங்கு குஷியாகச் சாப்பிடலாம் என்று இவர் அழைத்து வந்தார். இதோ அகல்யா வந்துவிடுவாள்' என்று சொல்லியதையே ஒரு சாக்காக வைத்துக்கொண்ட பாஸ்கரன் "நீங்கள் பேசிக்கொண்டே இருங்கள். இதோ நான் சென்று ஒரு க்ஷணத்தில் அகல்யாவை அழைத்து வந்துவிடுகிறேன். நீயும் இவருடன் பேசிக்கொண்டிருப்பா" என்றுபதிலுக்குச் சற்றும்எதிர்பார்க்காமல் ஒரே ஓட்டமாகக் குமுறலும் விம்மலுமாக வீட்டிற்கு ஓடிவந்தான்.

என்ன அநியாயம். அகல்யா தலைவிரி கோலமாய் ஒரே துக்கப் பதுமைபோல் சோபாவில் குப்புர விழுந்து புலம்புவதையும், அவள் தாயார் மயக்கம்போட்டவள்போல விழுந்துகிடப்பதையும் கண்ட உடனே மகா பூகசாலியான பாஸ்கரனுக்கு ஏதோ விபரீதம் இங்கு நடந்துவிட்டதை

கொடியிலறிந்து, நேரே பூமா இருந்த இடத்திற்கும் சேஷகிரி யிருந்த விடுதிக்கும் சென்று கூர்மையாகக் கவனித்தான்.

இரு இடங்களும் காலி! ஸேதுராமன் தனிமையை வேண்டி வெளியே கடற்கரைக்குப் போயிருந்ததால் அவரும் வீட்டிலில்லை. அகல்யாவிடம் ஓடிவந்தான். கட்டுப் படுத்த முடியாத உணர்ச்சிமிக்க ஆவேசத்துடன் அகல்யாவைத் தூக்கி உட்காரவைத்து முகத்தைத் துடைத்தவாறு அகல்யா....என்ன நடந்தது. விஷயத்தைச் சுருக்கமாக சொல்லு. உன் சிநேகிதி ஒருத்திக்கு இருவராய் அங்கு காத்திருக்கிறார்கள். நம்முடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டும். நான் புறப்படும்போதே என் தாயார் வருவதை நான் பார்த்துவிட்டு அப்போதுமுதல் தவிக்கிறேன் அகல்யா...என்று என்று அன்புத்தேன் சொட்ட ஆர்வத்துடன் கேட்டான்.

மடைதிறந்த வெள்ளம்போல் இருவிழிகளிலும் பாயும் அருவிச் சுனையைத் தடைசெய்யமாட்டாத அகல்யா தன்னை மறந்த நிலைமையில் கேவிக்கேவி விசும்பியவாறு பாஸ்கரனின் கால்களைக் கட்டிக்கொண்டு...“பாஸ்கர்! பாஸ்கர்! நமது அன்புமாளிகை இடிந்துவிட்டது. ப்ரேமாலயம் தகர்ந்துவிட்டது. இனி நம்கனவுகள் நினைவாகாமல் கலங்கிக் குழம்பிச் சேராகி உலர்ந்து வெடித்துவிடும் விதியமைந்துவிட்டது. உங்கள் மாசில்லா-மதிப்பில்லா-நிகரில்லாத அன்புக்கு அற்பணித்த இந்த இதயத்தை-சரீரத்தை இனி எமனுக்குத்தான் பலிகொடுக்கவேண்டும்....நான் அனுமதேயப் பிண்டமாம். எங்கப்பா தேவதாசி மகனும். ஐயோ! சொல்லவும் நா கூசுகிறதே பாஸ்கர் இனி நம்முடைய கரைகாணாத அன்புத்தனை அழிவதை நான் சகிக்கமாட்டேன்....

என்று பெரியதாகக் கத்தி அழுதவாறு சொல்வதை நிறுத்தவேயில்லை. பாஸ்கரன் இடைமறித்து எத்தனைச் சமாதான வார்த்தைகள் சொல்லியும் அகல்யா அவைகளைக் காதில் வாங்கவேயில்லை. கட்டிப் பிடித்துள்ள அவன் கால்களையும் விடவில்லை. ஒரே ஆவேசத்துடன்...பாஸ்கரன், இனி இப்பாவியை மறந்துவிடுங்கள். நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. வயதுவந்த பிறகு விவரம் புரிந்து இன்ப துன்பங்களின் உணர்ச்சிகளை யறிந்து மனத்தைப் பறிகொடுத்த பிறகு இத்தகைய சிதறல்கள்.... வாழ்க்கையில் எரிமலைகளின் எதிரொலிகள், தோன்றி வதைக்கும் அக்ரமங்கள் ஆதியில் பாலிய விவாகம் பெரியவர்கள் பார்த்துச் செய்துவைத்ததில் ஏற்பட்டே இருக்காது

என்று இப்போதுதான் என்னிதயத்தில் சுரீரென்று படு கிறது. இனி என் வாழ்நாள், "ஹ...பாஸ்கர்...பாஸ்கர்....' என்று அலறும் அதிர்ச்சியில் கேவல் இழுத்துக்கொண்டே போய்விட்டது.

இதைக்கேட்டும், கண்டும் பரிதவிக்கும் பாஸ்கரன் கண் ணீர் சொட்டச் சொட்ட அகல்யாவைத் தூக்கித் தன் மார் போடு அணைத்துச் சாத்தியவாறு, தண்ணீரைக் குடிக்கச் செய்து, பின் "அகல்யா! அகாயவாணி, பூமாதேவி சாக்ஷி யாக, இதோ இங்கு ஜோதிச் சுடர்விட்டு ப்ரகாசிக்கும் குத்துவிளக்குகளின் ரூபத்திலுள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மியின் திருவடி சாக்ஷியாக நானே உன் பதி! நீயே என் அதிபதி! இன்பநிதி! உத்தம சதி! இது சத்யம். எந்த ஒரு வரத க்ஷிணை ரூபாய் கிடைக்காததால்; என் தாயார் நமது ஆணித்தரமான—கருக்கல் சுவருபோல் கட்டிடம் எழுப்பி யுள்ள அந்தரங்கமான மாசிலாத அன்பை உதறிக் கொண்டு சிதைக்க முன்வந்தாளோ, அதோடு அவளுடைய ஆசை நிராசையாகி அந்தகாரத்தில் மூழ்கிவிட்டாள். அகல்யா! கடவுள் பாத சாக்ஷியாக இனி இந்த இதயபீடத் தில் உன்னையன்றி ஆரோகணித்து, இன்ப இல்லரசு செங் கோல் செலுத்த இந்த ஜென்மத்தில் வேறு ஒருவருக்கும் இடமில்லை. இது சத்யம்! சத்யம்! சத்யம் முக்காலும் சத்யம்! நானே தொழில் செய்து லக்ஷ லக்ஷமாகப் பணத்தைச் சம் பாதித்து என் தாயாரின் காலடியில் கொட்டிவிட்டு, நான் ஆண்டிப் பரதேசியாய், அனுதைக் கட்டையாய் திரிகிறேன் அகல்யா"....

"ஐயயோ! இதென்ன அதிர்ச்சி மிகுந்த வார்த்தைகளை சொல்லுகிறீர்களே. பாஸ்கர்...பாஸ்கர்"... மேலே பேச மாட்டாது திணறிவிட்டாள். "அகல்யா! இச்சமயம் நாம் அன்னியரை ஒட்டலில் உட்காரவைத்துவிட்டுப் பேசுவ தற்கு நேரமில்லை. முதலில் நமது குமுறல்களை உள்ளடக் கிக்கொண்டு அவர்களுடன் குதூகலமாக நடித்து விருந்தை நடத்திவிட்டுப் பின்பு வந்து ஒரு முடிவுக்கு வருவோம். எழுந்து வேறு உடையணிந்துகொண்டு வா அகல்யா" என்று கூறி அவளை ஆஸ்வாஸப்படுத்தினன். "பாஸ்கர்! மன்னிக்கவேணும். என்னுடைய நிலைமையில் நான் எங் குமே வரமுடியாது. எனக்குத் திடீரென்று மயக்கம் வந்துவிட்டதாயும், வர சவுகர்யப்படவில்லை என்றும் சொல்லிவிடுங்கள். என்னிதயம் அளிந்த புண்ணுய்த் துடிக் கையில் நடிப்புக்கு இடமில்லை.

பாஸ்: அகல்யா...என்னுடைய ஒரேஒருவேண்டுகோளை மட்டும் பூர்த்திசெய்ய மாட்டாயா? இதுவே நம்முடைய கடைசி சந்திப்பாகவும் இருக்கலாம்!

அகல்யா: ஐயயோ! இதென்ன பேச்சு பாஸ்கர்...

பாஸ்: என்னிதயத்திலிருந்து வெடித்து வரும் நெருப்புக் கனல்கள் அகல்யா! இன்று ஒருநாள் மட்டுமாவது நீ எனக்காக என்னுடன் வந்து, உன் சிநேகிதைகளையும் சந்தோஷப்படுத்தி என்னாவலையும் பூர்த்திசெய்ய மாட்டாயா அகல்யா! நான் பேசுவதை ஏதாவதுவித்யாஸமான எண்ணத்துடன் பேசுவதாக நினைத்துவிட்டாயா? ஊரறிய, உலகமறிய அக்கினி சாக்ஷியாகப் பலர் முன்பு மகிழ்ச்சியோடு உன்னைக் கைபிடித்து மணம் செய்துகொள்வேனேயன்றி, திருட்டுத்தனமாக இழுத்துக்கொண்டு போகும் கோழை நானல்ல அகல்யா. என்னை நம்புகிறாயா?

அதற்குமேல் அவளால் பொருக்கவே முடியவில்லை. ஏற்கனவே புயலடிக்கும் உள்ளத்தில் பெரும் சூராவளியும் இடியும் மின்னலும் சேர்ந்து ஒருங்கே வந்ததுபோன்ற அதிர்ச்சி உண்டாகி, அந்த உணர்ச்சி அவள் கண்களில் பளிச்சிட்டு ப்ரகாசித்து மின்னியது. "பாஸ்கர்! அம்மாதிரி கீழ்த்தரமான வர்க்கத்தில் தாங்களிருப்பதாக நான் நினைத்தால்கூட தெய்வம் என்னை உதைத்துத் தள்ளும். உலகம் பழித்து இழித்துப்பேசும். சமூகமே என்னை உதறி தூற்றிவிடும். மேலும் நெருப்பு இருக்குமிடம் தீயின் பயங்கரத்தைக் காணமுடியுமேயன்றி, ஈ எரும்பின் பயத்தைப் பற்றிப் பேசமுடியுமா? நான் அத்தனை மதிகெட்டவளல்ல பாஸ்கர். பேலும் பெரியவர்களை துவேஷித்துக்கொண்டு திருட்டுக் கல்யாணம் செய்து வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா! அதை அறவே வெறுத்துச் சாவுமணியடிக்கும் பேர்வழி நான் என்பதையும் தைர்யமாகக் கூறுவேன் பாஸ்கர். இன்பம் என்பதை பயங்கரமும், நடுக்கமும் திடுக்குத் திடுக்கென்று தூக்கிப்போடும் நிலைமையும் அற்ற தன்மையில், அதன் இனிப்பைக் கண்டுகளிக்க முடியுமேயன்றி, நீர்ச்சுழலில் இருக்கும் ஆற்றில் படகில் உல்லாஸ யாத்திரை போகிறவர்களின் கதி எப்படியோ அப்படித்தான் திருட்டுக் கல்யாண வாழ்க்கையின் இன்பமாகும். இதை நான் யார் உபதேசித்தாலும் ஏற்கமாட்டேன். என்னிதயத்தைப் போலவே பளிங்குக் கண்ணாடியாய்த் தங்களுடைய அமுத உள்ளமும் இருப்பதைக் குறிப்பாலறிந்துதான் நான் அன்புவிதையை விதைத்து அருமை வ்ருக்ஷமாக வளரவிட்டேன். அது ஆண்டவன் செயலால் கனியைத் தருமோ.... கதறச் செய்யுமோ! இதுதான் சோதனையின் கொடுமை தீராசில் இப்போது முள் ஆடுகிறது. பாஸ்கர்! ஆண்டவன்மீது ஆணையாக உங்கள்மீது எனக்கும் சந்தேகமில்லை. என்மீது உங்களுக்கும் சந்தேகமில்லை. ஆனால்....

பாஸ்: அகல்யா! என்னல் பேசவே முடியவில்லை. நாம் தற்சமயம் பாக்குவெட்டியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். உன் சிநேகிதர்கள் வீடுதேடி வந்துவிட்டால் ப்ராண சங்கடமாகிவிடும். தயவுசெய்து கிளம்பு அகல்யா! எனது இந்த ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் இப்போது பூர்த்தி செய் அகல்யா....என்று கெஞ்சினன். அதற்குமேல் எதுவும் பேச முடியவில்லை. அங்கு போய் அவர்களை ஒருவாறு அனுப்பிவிட்டுப் பிறகு வந்து மற்றதைக் கவனிக்கத் திட்டமிட்டுக்கொண்டு, மாற்றுடையணிந்து சென்ருள். மனக் குழப்பம், குமுறல் இதற்கு மத்தியில் அவர்களால் உண்மையான குதூகலத்தை எப்படி காணமுடியும். ஏதோ ஒப்புக்குப் பேசி மகிழ்வதுபோல் நடித்தார்கள்.

அச்சமயம் அங்கு காப்பிசாப்பிடவந்த இருவர் உரத்த குரலில் அவர்கள் பேசிக்கொண்டு வந்ததைத் துடர்ந்து... வெகு பயங்கரந்தான் சார். எப்படி அந்த பயித்தியத்திற்கு வண்டியும் குதிரையும் கிடைத்ததோ தெரியவில்லையே. அது ஓட்டுகிற அழகில் குதிரையின் சேணம், கடிவாளம் எல்லாம் பறந்தது ஸார். காரில் சரியான மோதல்தான். என்ன ஆயிற்றோ...

இன்னொருவர்:—ஆவதென்ன இருக்கிறது ஸார். குதிரைக்கு இரும்பு உடைந்திருக்கும். உயிருக்கே ஆபத்தோ என்னவோ. பயித்தியத்தின் கதிதான் சந்தேகம்.

மற்றொருவர்:—ஏன் ஸார், பின்னல் வண்டிக்காரன் தலைதெறிக்க ஓடி வந்தானமே....

இன்னொருவர்:—அவன் வந்தது என்ன அதிசயம். யாரோ இரண்டு பெண்பிள்ளைகள் கூடவன்றோ ஓடினர்கள். நான் காரை விடும்போது கவனித்தேன்...சரி...சரி... உலகத்தில் இதுபோல் எத்தனையோ விபத்துகள் நடக்கின்றன. அவைகளுக்குக் கவலைப்பட்டு முடியுமா? இவைகளால் தினப் பத்திரிகைக்காரர்கள் கவலையின்றி பிழைக்கலாம். ...பெரிய கொட்டை எழுத்தில் "பயித்தியம் வண்டி ஓட்டியதில் விபத்து" இரண்டு பெண்களுக்குப் பேராபத்து...வண்டிக்காரனின் பரிதாபம்...குதிரையின் கண்ருவி" என்றெல்லாம் ஒட்டு நோட்டீஸ்களில்போட்டு சுவர்களில் ஒட்டிவிட்டால் பத்திரிகைகள் பறக்குமல்லவா....இதென்ன ஸார்...சாப்பாட்டுக்கு இன்னும் வழியைக் காணவில்லை......

மேற்குறித்த சம்பாஷணைகளாகிய கூரிய பாணங்கள் முதலில் அகல்யாவின் காதில்பட்டுத் திடுக்கிட்டாள். அதே சமயம் பாஸ்கரனும்கவனித்துத் துடிதுடித்தான். இவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுவதாகச்செய்யும் பாசாங்கு நடிப்புக்கும் முற்றுபுள்ளி விழுந்து விட்டது. இருவரும் ஒருவரை

யொருவர் பார்த்துக்கொண்டு விழிக்கிறார்கள். பயித்தியம். இரண்டு பெண்பிள்ளைகள்...விபத்து... இந்த பதங்கள் காதில் பயங்கரமாகவிழுந்து இதயத்தைத் தாக்கியது. தர்ம சங்கடமான நிலைமையில் எழுந்திருக்கவும் முடியவில்லை. சாப்பிடவும், பேசவும் முடியவில்லை.

சமய சஞ்சீவி போன்ற மதியையுடைய அகல்யா, எதையோ எண்ணித் திடுக்கிட்டவள்போல் நாடகம் நடித்துக் கழுத்தைத் தடவிபார்த்தாள். 'ஐயயோ'...என்று அலறினாள். அந்த சமயம் பாயஸம் பரிமாறப்பட்டது. அகல்யாவின் அலறலைக்கண்ட தாராவும்சித்ராவும்"என்ன!என்ன!" என்று பரபரப்புடன் கேட்டார்கள். அவர்களின் காதோடு பேசுவதுபோல் மெல்லியகுரலில், தோழிகளே... மன்னிக்கவேணும். நான் இங்குவருகிற அவசரத்தில் முகங் கழுவும்போது வைர நெக்லேஸை வென்னீர் ரூமில் கழட்டி மறதியாய் வைத்துவிட்டு வந்துவிட்டேன். அம்மாவுக்கும் தெரியாது. நான் உடனேபோய் அதை கவனிக்க வேண்டும். நாளைக் காலையில் நான் உங்களை வீட்டில் வந்து பார்க்கிறேன். இனி எனக்கு இங்கு இருப்புக்கொள்ளாது. பாஸ்கர்...என்று கண்ணால் ஜாடை காட்டினாள்.

தோழிகளும் நிஜம் என்று நம்பி உபசார வார்த்தை களைக்கூறி வழியனுப்பினார்கள். அகல்யாவும் பாஸ்கரனும் காரில் ஏறினார்கள். ஆனால் எந்தஇடத்தில் இத்தகைய விபத்து நடந்தது என்பதையறியாமல் எங்குசெல்வது என்கிற குழப்பமும் யோசனையும் உண்டாகியதால் காரை உடனே விடமுடியாமல் தயங்கி ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இதற்குள் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசிய இருவரும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வருவதை கவனித்த அகல்யா சடக்கென்று அவர்களுக்கு எதிரே சென்று "நமஸ்காரம் இந்த ஊரில் ஏதோ ஜட்காவண்டி விபத்து நடந்ததாகக் கேள்விப்பட்டோம். எங்கள் குழந்தையை மாலை முதல் காணவில்லை. 5 வயது பையன். அந்த விபத்தில் எங்காவது சிக்கிக்கொண்டானோ என்று பயந்து தேடியலைகிறோம்"....என்று முடிப்பதற்குள் அவர்களில் ஒருவர் "அம்மா! நாங்கள் இந்த ஊரல்ல. வெளியூரிலிருந்து ஊர் சுற்றிப் பார்க்க வந்தவர்கள்தான். அதனால் வீதிப் பெயர் தெரியாது. பெரியமனிதர்கள் வசிக்கும் நல்ல தெருவு. அடையாளத்திற்கு அங்கு ஒரு பள்ளிக்கூடம் இருப்பதை எழுத்துப் பலகையில் பார்த்தோம். அந்த விபத்தில் சிறிய குழந்தை எதுவும் அகப்பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அங்கு சென்று விசாரித்துப்பாருங்கள். நாங்கள்

அவசரமாகப் போவதால் கூட அழைத்துச்செல்ல முடிய வில்லை. மன்னிக்கவேணும்," என்று பெருந்தன்மையாகச் சொல்வதைக் கேட்டதும் அகல்யாவுக்கு இன்னு இடம் என்று புரிந்துவிட்டது.

உடனே அவர்களுக்கு வெகுவாய் நன்றிகூறி வணங்கி விட்டு சடக்கென்று காரை வேகமாக விட்டாள். காரின் வேகமும் அவளுடைய இதயவேகமும் ஒன்றாகவே போட்டி யிட்டது. கடலின் அலைகள் கொந்தளிப்பதுபோல் இதயக் கடலில் எண்ணற்ற அலைகள் மோதிமோதி உடைகின்றன. ஏதோ ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்தவள்போல், "பாஸ்கர்! ஒரே ஒருவேண்டுகோள். அதைப் பூர்த்திசெய்ய வேணும்......"

பாஸ்கரன் உள்ளத்தில் சலடையிட்டுச் சலிக்கும் ஒரே வேதனையில் தன்னையே மறந்திருந்தான் என்றால் மிகையா காது. தன்னுடைய வாழ்வே முடிந்துவிட்டது போன்றும் இனி தனக்கு இன்பம்...மகிழ்ச்சி என்பது கனவில்கூட கிட்டாதோ என்கிற பீதியும் ஒருங்கே பிடித்து ஆட்டுவதால் தலையை தன்னிரு கரங்களாலும் பிடித்துக்கொண்டு காரில்சாய்ந்திருந்தான். அகல்யாவின்வார்த்தைகள்காதில் படவேயில்லை. ஆதலால் பதில் சொல்லாதிருப்பதைக் கண்ட அகல்யா சற்று திடுக்கிட்டு பாஸ்கரனை உற்று கவ னித்தாள்.

கண்களில்வழியும் தாரைகளின் வெள்ளமும் வியர்வை வெள்ளமும் ஒன்றுகூடி நீரில் மிதப்பவன்போல் காணப் பட்டான். கேவிக் கேவி மூச்சுவிடுவதைக் கவனித்த அகல் யாவின் நெஞ்சம் வெடித்துவிடும் போலாகிவிட்டது. ஒரு ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு, பாஸ்கரின் தோள் களைப் பிடித்து உலுக்கியவாறு, "பாஸ்கர்! இதென்ன பரி தாபம். வீரசிங்கம்போன்ற ஆண்பிள்ளை செய்யும் செய் கையா இது! தாங்களே இப்படி அசைந்து கொடுத்துவிட் டால் பேதை உள்ளமாகிய என்னிதயம் படீரென்று வெடித்து விடும்போலிருக்கிறதே! என் கதி என்ன ஆவது! இப்படி என்னைப் பாருங்கள். எங்கே? பாஸ்கர்...பாஸகர்" என்று விம்மும் குறலில் நடுக்கத்துடன் கேட்டவாறு பாஸ் கரனின் முகத்தைத் துடைத்து உற்றுநோக்கினாள்.

'ஹா! என்ன தேஜஸ்! என்ன கம்பீரம்! சந்திரனுக் காவது ஒரு களங்கமிருக்கிறது. எனது மதிமன்னனு டைய முகத்தில் அத்தகைய குறைபாடுகள் கடுவளவுமில் லையே. ஐயோ! சமூகமே...வரதக்ஷிணைப் பேயே! உன் தாண்டவத்தினாலல்லவா இந்த ஸௌந்தர்ய சோபையுடன் ப்ரகாசிக்கக்கூடிய வதனம், சிவந்து, வாடி வதங்கி, ஏக்கத்

தின் ரேகையும், நிராசையின் நிழலும், சோகத்தின் சாய லும் படிந்து ஆதிக்கம் செலுத்துகிறதே! என்ன அநியாய உலகம். சீச்சீ! எது எப்படியாவது ஆகட்டும் என்று மனதை மாற்றிக்கொண்டு இவருடன் நானும் பத்தான் கோட்டிற்குப் போய்விடட்டுமா...ஹா! என்ன அல்ப எண் ணம். எத்தனை அவஸரபுத்தி! சீச்சீ! அம்மாதிரிச் சென்றா லும் நிம்மதியான வாழ்க்கைக்கு இடமுண்டா? இல்லை. இல்லை. சந்தோஷ வாழ்க்கைக்குப் பதிலாகச் சதா சங்கட கடலில் பயம், திகில், பீதி, நிம்மதியற்ற குழப்பம் முதலிய பயங்கரச் சுழலில் மூழ்கி மூழ்கி அலையடித்து நாசம்செய்யும் சூன்ய வாழ்க்கையைத்தான் காணலாம். "சிந்தையை அடக் கியே சும்மாவிருக்கின்ற திறனரிது சத்தாக்கி என்" என்று பெரியார் பாடியிருக்கிறார்கள். அத்தகைய மனக்குரங்கைக் கட்டி யடக்கி வசமாக்காத வலிவும் ஒரு வலிவா! சீ! பாஸ்கரன் அத்தகைய கோழையல்ல. ஏன்...அகல்யா! நீ மட்டும் கோழையா? உன்னிடமே குடிகொண்டுள்ள உன் நெஞ்சை நீ அடக்கும் சக்தி உனக்கு இல்லையா? ஸேதுராமனும், ஸீதாதேவியும் அளித்த உத்தமமான பிரவி நீ அல்லவா! உன் தைரியத்தை—லக்ஷியத்தை—மனோ உறுதியை— கைவிடாதே. சிற்றின்பத்தின் துணையுடன்தான் பேரின் பமும் அரைகூவி வரவேற்கிறது என்கிற தத்துவத்தை நீ படித்திருந்தாலும் அனித்யமானதை அகற்றித்தள்ளிவிட்டு நித்யானந்த வழியில் நீ உன் மனத்தைத் திருப்பி உன்னை உலகம் கொண்டாடும் வழியில் வாழ்க்கைப் படகைச் செலுத்து. அகல்யா! பயங்கரமான இரவும் அப்படியே இருப்பதில்லை. ப்ரகாசமான பகலும் அப்படியே நீடிப்ப தில்லை. மாறிமாறித்தான் வந்து தனது மகிமை பொருந் திய தத்துவ ஜோதியை விளக்கிக் காட்டுகிறது. அதே போல் உன் வாழ்நாள் இன்று இருண்ட பயங்கரமான அந்தகாரத்தில் திக்கு திசை தெறியாத அயோமயமான நிலையில் இருக்கலாம். ஆனால் ஆண்டவனின் அருள் உன் மீது படும் புனிதகாலம் வரும்போது, உடனே கிழக்கு வெளுத்து ஆநந்த அருணோதயம்—இன்பச் சூர்யோதயம், என்னிதய கோயிலில் மகிழ்ச்சிபீடத்தில் அமர்ந்துள்ள, பாஸ்கரனின் திவ்யதரிசன ப்ரகாசம் உண்டாகிப் புத்து ணர்ச்சியும், புதுவாழ்வும் கட்டாயம் வந்தே தீரும். மனத் தைத்தளரவிடாதே. உன்னையேநீ ஏமாற்றிக்கொள்ளாதே. உலகத்தவர்கள் உன்னைக்கண்டு எள்ளி நகையாடி, ஏசிப் பேசி குழப்பம் செய்யும் வகையில் திரும்பிவிடாதே. ஜாக் ரதை...ஜாக்ரதை! அகல்யா அதிஜாக்ரதை' என்று பித்துப்பிடித்தவள்போல் தனக்குத் தானே எண்ணாததும் எண்ணி, மனம் வெதும்பிப் புண்ணாகித் தன்னையே மறந்த நிலையில், பாஸ்கரனின் சுந்தரவடிவ வதனத்தை இமை

இசைக்காமல் நோக்கியவாறு, பதுமைபோலாகிவிட்டாள். இத்தனை எண்ணங்களில் சிந்தையைச் சிதரவிட்டதெல்லாம் சில நிமிஷ நேரங்கூட ஆகியிராது. ஆனால் இந்த இளங் காளைகளின் உள்ளத்தில் எத்தனையோ கர்பகக் கோடியெல்லாம் இத்தகைய சோகச்சேற்றிலேயே புதைந்துகிடப்பது போன்ற உணர்ச்சியும் நீண்ட பெருமூச்சும் ஒருவரையொருவர் துறத்துவதுபோலமைந்தது. எதிரில் வரும் ஒரு மோட்டாரின் அதிக வெளிச்சமான விளக்கின் ப்ரகாச டால் இந்த காரில் பாஸ்கரனின் முகச் சாந்தியை அரைநொடியில் பளிச்சிட்டுக் காட்டி மறைந்த போதுதான் அகல்யா தனது உணர்வைப் பூர்ணமாகப் பெற்றதோடு, தனக்கும் ஆண்டவனருளால் இத்தகைய ஒரு ப்ரகாசம் கட்டாயம் கிடைக்கும் என்கிற உருதியான நம்பிக்கையும் கடவுளிடத்தில் அபார பக்தியும் எங்கிருந்தோ உண்டாகியது.

சிலுசிலுப்பாக வீசிய காற்று, இதுவரையில் சரீரத்தில் உரைத்தும் உரைக்காமல் உறைந்து மரக்கட்டை போலிருந்தவளுக்கு திடீரென்று சில்லென காற்றின் கவர்ச்சிகரமான உணர்ச்சி உண்டாகியது. சடக்கென்று தலையைக் கோதிக்கொண்டு, முகத்தைத் துடைத்துப் பின் பாஸ்கரனை மீண்டும் பார்த்தாள். "பாஸ்கர்....பாஸ்கர்...."

"அகல்யா!....என்னால் பேசமுடியவில்லை. என் நிலைமை என்னையே வஞ்சித்து, ஏமாற்றிக் கயவனாக்கிவிடும்போன்ற பயங்கரம் உண்டாகி வதைக்கிறது. தயவுசெய்து என்னை விட்டுவிடு. நான் இப்படியே இறங்கிப்போய்விடுகிறேன். பிறகு ஒருகால் உன்னைச் சந்திக்கும் பெரும் பாக்யம் எனக்குக் கிடைக்கும்போது ஓடிவந்து உன்னை"....

"போதும்....நிறுத்துங்கள் பாஸ்கர்! ஒருவன் ஒரு வண்டியை—ரதத்தை—ஓட்டும் பொருப்பேற்றுவிட்டால் அதை எந்த இடத்தில் கொண்டு நிறுத்தவேண்டுமோ, அங்கு நிறுத்தினால் உண்மை ஜெயத்தை அடைந்தவனாவானேயன்றி நட்ட நடுத்தெருவில் நிருத்திவிட்டால் அதிலுள்ள தெய்வம், எந்தகதி ஆவது. அந்த மகத்தான பாதகத்திற்கு யார் ஜவாப்தாரி? வண்டியை—ரதத்தை—ஓட்டும் சாரதிதான் ஜவாப்தாரி என்று உணரவேண்டாமா? பாஸ்கர்! என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள்"....

பாஸ்: அகல்யா! நீ என்ன சொல்லப்போகிறாய் என்பதை உன்னிதயத்தைப் புகைப்படம் போல் காணும் என்னிதயம் அறியும். அதாவது, என்னை விபத்து நடந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களிடம் விட்டுவிடுவதாயும் நீ அவர்களிடம் வரமாட்டேன் என்றும், சொல்வது தானே உன்னுடைய வேண்டுகோள்.....

அகல்யாவின் ஆச்சர்யம் கரைகடந்து ஓடும் காட்டாற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடியது. அந்த உணர்ச்சி வேகத்தில் தன்னையே மறந்து, "ஹா! பாஸ்கர்" என்று தன்னிதயத்தைத் திறந்து காட்டுவதுபோலக் கூவியவாறு, தன்னுருதிச் சங்கிலி தளர்ந்துபோய் பாஸ்கரனின் முகத்தோடு முகம் பதித்து அழுத்திவிட்டாள். அடுத்தவினடி பதைபதைப்புச் சற்று அடங்கியதும் 'ஐயோ இதென்ன சோதனை!' என்று தன்னையே தான் எச்சரித்துக்கொண்டு சடக்கென்று விலகினள்.

"பாஸ்கர்! சத்யமாக அதுவேதான் கேட்க வந்தேன். எல்லோரும் ஒரு மனிதனல் செய்யப்பட்ட கருவியைக் கொண்டு புகைப்படம் பிடிக்கிறார்கள். நீங்களோ ஆதி அந்தமற்ற அண்ணலால் அளிக்கப்பட்ட மனோதத்வ உணர்ச்சிக் கருவியால் படம் பிடித்துவிட்டீர்கள். நேரமோ அதிகம் ஓடுகின்றது. உங்களுடைய பரிதாபம் என்னுருதியைக் குலைக்கின்றது. பாஸ்கர்! வைர நெஞ்சமும், வீர உருதியுமே நமக்குத் துணை: எங்கே..."அதைப் பெற்றுக் கொண்டுவிட்டேன். இனி அவ்விரண்டையும் கைவிடமாட்டேன் என்று சொல்லுங்கள் பாஸ்கரன்...உங்கள் முத்தான வாய்திறந்து சொல்லுங்கள். அந்தச் சொல்லமுதத்தை உண்ட பிறகு என்னுயிர் சிரஞ்சீவியாக உயிர் பெற்றுவிடும்....எங்கே? சொல்லுங்கள் பாஸ்கர்" என்று கெஞ்சினள்.


அகல்யா....என் இன்ப வாழ்க்கைப் படகை சரியான சிறந்த மார்க்கத்தில் ஓட்டிச் செலுத்தும் மாலுமிபோன்ற உன்னிதயமும் என்னிதயமும் இனிவேறல்ல. அதில்பாய்ந்த வைரம்....அதில் சிலைபோல் அமர்ந்துள்ள உறுதி....அதில் அசைக்கமுடியாது ஆரோகணிக்கும்நம்பிக்கை....இதோ... இதோ...இந்த இதயத்திலும் ஆண்டவன்மீது ஆணையாக இருக்கின்றன....சரிதானே...அகல்யா? எங்கே!ஒருசோகச் சிரிப்பு...மோகனப் புன்னகைக்கு இந்தநிமிடம் இடமில்லை என்பது இப்பாவிக்குத் தெரியும்....ஒரு சோகச்சிரிப்பு மட்டும் அவுடதம்போல் எனக்களித்து என்னைத் தேற்றிவிடு. இனி அந்தச் சோகச்சிரிப்பைகூட நான் என்று காண்பேனே தெரியாது....எங்கே அகல்யா....

இவன் கேட்டு வாய்மூடும் முன்னர் வெங்கலமணியின் ஓசையுடன் கலகலவென்று அகல்யாவின் சிரிப்பொலியும் அதைத் பாஷ்பத்தின் அருவிப் பெருக்கையும் ஒரே சமயத்தில் கேட்டும் கண்டும் பாஸ்கரன் பூரித்தான். அவன் தேகம் பூராவும் மின்ஸாரத்தினல் தாக்குண்டதுபோன்ற புல்லரிப்புண்டாகி அகல்யாவின் இரு கரங்களையும் பற்றித் தனது இதயத்தில் பதித்துக்கொண்டு ஒரு நெடுமூச்செறிந்தான்.

8322

# டான்-ஹுவாங் குகைகள்

சர் ஆரால் ஸ்டீன் 1901-ல் கோட்டா என்னுமிடத்தில் ஆராய்ச்சி நடத்தி வந்தார். அதற்குப் பிறகு அவர் டான் ஹுவாங்குக்குச் சென்றார். அங்குதான் அவர் 'ஆயிரம் புத்தர் குகைகளை'க் கண்டுபிடித்தார். அந்தக் குகைக்குப் பக்கத்திலுள்ள ஆலயமொன்றில் ஏராளமான சுவடிகளும் பட்டுத்துணியில் வரையப்பெற்ற அழகான ஓவியங்களும் ஓர் அறையில் போட்டுச் சுவர்வைத் தடைத்திருப்பதை அவர் கண்டார். அங்கிருந்த பொருள்கள்தான் இப்போது புது டில்லி மத்திய ஆசிய தொல்பொருள் காட்சிசாலையில் முக்கிய பொருள்களாக அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.



இரண்டாவது தடவையாக அவர் கோட்டன், டொமோகோ, நியா ஆகிய இடங்களில் மிக முக்கியமான சுவடிகளைக் கண்டெடுத்தார். ஏராளமான சமஸ்கிருதச் சுவடிகளும், கரோஷ்டி லிபியில் எழுதப்பட்ட மரப்பலகைகளும் கிடைத்தன. அவைகளும் இந்தக் காட்சியில் இடம்பெற்றிருக்கின்றன.

காரக்கோஜா, துப்ரான் ஆகியவிடங்களிலுள்ள புத்த ஆலயங்களில்காணப்பட்ட சுவர்ச் சித்திரங்களில் இந்தியக்கலை அம்சம்நிறைந்து காணப்படுகிறது பாதிச் சுவருக்கு நிறைந்திருக்கிற ஒரு ஓவியத்தில், ஆவி பிரிந்த புத்தரின் உடலைச் சுற்றி சோகமே உருவான லோகபாவர்களும் மன்னர்களும் இருப்பதைக் காணலாம். அழகான ஓவியங்கள் தீட்டப்பெற்ற பட்டுப் படுதாவும் இங்கே காட்சியில் இருக்கிறது.

இப்பொருட்காட்சிசாலையின் மத்திய மண்டபத்தில் ஒரு பிரிவு முழுவதிலும் பழையசுவடிகளும், காகிதத்தில் வரைந்த சித்திரங்களும் இருக்கின்றன. இந்தியக் கலைச்சார்பு அதிகமாகக் காணப்படுகிற காட்சிப் பொருள்கள் காரைப் பொம்மைகளும் மரம்பொம்மைகளும்தான். அவைகளில் அனேக பொம்மைகளுக்குத் தங்க முலாம் கொடுக்கப்பட்டு, நீலம், பச்சை வர்ணங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புத்தர் கலைகள் அபய முத்திரையுடன் உள்ளன. அவை குப்தர் காலத்திய பாணியிலிருக்கின்றன.

கடைசல் வேலைச் சிறப்பைக் காட்டுகிற மர வேலைப்பொருள்களும் ஏராளமாயிருக்கின்றன.

பக்தர்கள் வேண்டுதலாக உபயமளிக்கிற பட்டியல்களும் காட்சிப்பொருள்களில் இருக்கின்றன. அவைகளில் புத்தர், சிஷ்யர் குழுவின் மத்தியில் வீற்றிருக்கும் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள பௌத்த புன்னிய ஸ்தலங்களுக்கு விஜயம் செய்த யாத்ரிகர்கள் இந்தப் பட்டயங்களை எடுத்துச் சென்றார்கள்.

இப்படத்தில் பட்டுத்துணியில் வரையப்பெற்ற ஓவியத்தைக் காணலாம். சீனச் சக்ரவர்த்தி தம் மனைவியுடன் உட்கார்ந்திருப்பதை இப்படம் சித்திரிக்கிறது.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
சோதாஹ்ருதயம் 0-12

## வை.மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
ரூ. 1-8

பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

---

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-8

---

ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0
அபூர்வ
ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.